மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 11 ★ 14-7-57 சென்னை ★ விலை 16 காசு

திராவிடத்தில், ஜூலை - 15

—(0)—

உரிமைப் போராட்டம் துவங்கியது!

—(0)—

தென்னாட்டை இழித்துரைத்த நேரு வடநாட்டில் வாய்மூடி மௌனியாவதேன்?

ஜூலை 15! நான்கு ஆண்டுகளுக்குமுன் திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தைத் துவக்கிய நாள்! அந்த நாள் கழக வரலாற்றில் மட்டுமல்ல, இந்த நாட்டு வரலாற்றிலும் முக்கியமானதொரு நாள்! திராவிடத்தின் உரிமைப் போர் ஆரம்பமானது, விடுதலைப் போராட்டத்தில் முதல் கட்டம் அன்று காணப்பட்டது!

"தமிழரைப் பழித்தோரை, தமிழகத்தைப் பழித்தோரை, என் தாய் தடுத்தாலும் விடேன்!" என்று தமிழர்கள் உரிமைமுரசு கொட்டிய நாள்! ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் நம்மைப் பார்த்து எள்ளி நகையாடுவதா என்று புலிநிகர் மாந்தர் வழிவழி வந்தோர் போராட்டத்தில் குதித்த நாள்!

பண்டித நேரு தமிழரை இழித்தும் பழித்தும் பேசினார். அவர் இந்த உபகண்டத்து பிரதமர், காந்தியாரின் வாரிசு, காங்கிரசின் ஒப்பற்ற தலைவர், இந்தியாவின் முடிசூடா மன்னர், ஆசியாவின் ஜோதி, மாந்தருள் மாணிக்கம், இங்கிலாந்தின் நண்பர் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை, ரஷியாவிடம் பரிவு காட்டுவர், சீனாவிடம் பாசம் கொண்டவர், அவர் சென்றால் அவனியெங்கும் அமோக வரவேற்பு இருக்கிறது, இந்தியாவிற்குள் அவரை எதிர்த்து நிற்பார் யாரும் கிடையாது! அவர் மிகமிகப் பெரியவர், நாம் மிகச் சாமான்யர்கள்! புகழிற்குப் பாத்திரமாக இருந்தார் அவர், எளிமைக்கு இலக்காக இருந்தவர்கள் நாம்! இந்தியாவின் அரசியல் அதிகாரமனைத்தும் அவர் காலடியில் கிடந்தது, நாமோ எதிர்க்கட்சிகளின் வரிசையில் நமது உழைப்பை நம்பி வளர்ச்சியின் ஆரம்ப நிலையிலிருந்தவர்கள்! இருந்தாலும் அந்த மிகப் பெரியமனிதர் கூறியதைக் கண்டித்து சாமான்யர்களாகிய நாம் போராடினோம்!

ஊரில் பணத்திலும் அதிகாரத்திலும் பலம் பெற்றுள்ள சீமான் ஒருவர், ஒரு ஏழையின் தாயை எட்டி உதைத்தால், அவர் சீமான் — ஊருக்குப் பெரியவர் என்பதற்காகச் சும்மா விட்டு விடுவானா? அதைப் போல, தமிழர்களின் போராட்டத்தை "முட்டாள்தனம்" என்றும் "நான்சென்ஸ்!" என்றும் பழித்த பண்டிதருக்கு, தமிழகம் தனது கண்டனத்தை ஜூலை 14 காட்டியது.

அடக்குமுறை தாண்டவமாடியது. தடியடிப் பிரயோகங்கள் நடைபெற்றன இரத்தம் சிந்தப்பட்டது, கைகால்கள் முறிக்கப்பட்டன. துப்பாக்கிகள் வெடித்தன, பிணங்கள் விழுந்தன! சட்டப் பிரிவுகள் தாக்கின, ஆறுயிரம் கழகத் தோழர்கள் சிறையில் தள்ளப்பட்டனர்! அடக்குமுறையால் கழகம் நலிந்து போகவில்லை, செழிப்புடன் வளர்ந்தது. அடிபட்ட வேங்கையைப்போல பாய்ந்து போராடியது!

பத்திரிக்கை உரிமை!

★

ஐரோப்பாவில் பிரெஞ்சு நாட்டுக்கும் செர்மன் நாட்டுக்கும் மத்தியில் "ரூர்" என்ற சிறு பகுதியிருக்கிறது. சில காலம் பிரெஞ்சு நாட்டாலும், சில சமயம் செர்மன் நாட்டாலும் அது பிடிக்கப்பட்டு வந்தது,

1923ல் பிரெஞ்சுப் படை ரூர் பகுதியில் புகுந்து, அதைத் தம் வசப்படுத்திக் கொண்டது. பிரெஞ்சுப் படைக்கு அங்கு எதிர்ப்பு இருந்தது. சிறு சிறு கலகங்கள் தோன்றின. பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்க விரும்பிய பிரெஞ்சு படைத் தலைவர்களில் ஒருவர், ஒரு அறிக்கையை எழுதி, ரூர் பகுதியில் பிரபலமாக இருந்த "பிராங்க்பர்ட் சைட்டுங்" என்ற பத்திரிக்கைக்கு அனுப்பினார். சில நாட்கள் கழித்து, பத்திரிக்கை ஆசிரியர் அந்த அறிக்கையைத் திருப்பியனுப்பி விட்டார்.

தான் அனுப்பிய அறிக்கைப் பிரசுரிக்கப்படாமல் திருப்பியனுப்பப் பட்டதும், படைத் தலைவருக்குக் கோபம் வந்தது. நேராகப் பத்திரிக்கை அலுவலகத்திற்குப்போய், பத்திரிக்கை ஆசிரியரைக் கூப்பிட்டு வரச்செய்தார்.

பத்திரிக்கை மறுதளித்து அனுப்பிய அறிக்கையை முன்வைத்து "இந்த அறிக்கை நாளைக் காலை வரும் பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் கொட்டையெழுத்தில் வந்தாக வேண்டும்" என்று படைத் தலைவர் உத்தரவிட்டார்.

"வருந்துகிறேன், அது இயலாது" என்று ஆசிரியர் ஆரம்பித்தார்

"என்ன, நான் சொல்கிறேன்!" எனப் படைத்தலைவர் சத்தமிட்டார்,

"நீங்கள் சொல்கிறபடி நடக்காவிட்டால், என்ன நேருமென்று எனக்குத் தெரியும்; பத்திரிக்கையை நீங்கள் பறிமுதல் செய்யலாம், அலுவலகத்தை மூடலாம், அச்சு இயந்திரங்களை உடைத்து, கட்டிடத்துக்குநெருப்பு வைக்கலாம்; ஆசிரியர்களைத் தூக்கில் போடலாம். இவ்வளவும் செய்யலாம், ஆனால் இந்தப் பத்திரிக்கையில் நாங்கள் என்ன போடவேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிட மட்டும் முடியாது!" என்று ஆசிரியர் அமைதியுடன் சொன்னார்.

படைத்தலைவர் சிறிது நேரம் பயமுறுத்திப் பார்த்தார், சத்தமிட்டார், கோபித்தார். ஆசிரியர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. படைத் தலைவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பத்திரிக்கையை மூடுவதாலோ, ஆசிரியர்களைச் சிரச்சேதம் செய்வதாலோ, என்ன பலன் கிடைக்கப்போகிறது?

"நீங்கள் கட்டாயப்படுத்தாமலிருந்தால், நானே இந்த அறிக்கையைப்பத்திரிக்கையில் போடுகிறேன். ஆனால் எந்தப் பக்கத்தில், எப்படி, என்பதெல்லாம் எங்களுக்கு விட்டு விடவேண்டும்!" என்று ஆசிரியர் கடைசியாகச் சொன்னார்.

முதலில் காட்டிய கோபத்துக்கு மன்னிப்புக் கேட்டு, பிரெஞ்சுபடைத் தலைவர் திரும்பினார்.

இட்லர் ஆட்சிக்கு வந்ததும், முதலில் அத்தகைய பத்திரிக்கைகளைப் பறிமுதல் செய்தான்!

ஜுலை 15ந் தேதி தமிழகத்தில் இரயில்கள் நிறுத்தப்பட்டன! ஐநூறு இடங்களுக்கு மேலாக, இரயில்கள் நின்றன! அந்த ஒரு நாளில் மட்டும், இரயில் நிறுத்தப்போராட்டத்தில், 5000 பேர்களுக்கு மேல் சிறை புகுந்தனர்! உண்மையில் அன்று, அதிகாரவேகத்துடன் ஆவேசப் புகைச்சலுடன் ஓடிவரும் டில்லி ஏகாதிபத்திய இரயில் தமிழ் நாட்டில் நிறுத்தப்பட்டது!

அவ்வளவுக்கும், மிக அமைதியான முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டம் நடைபெற்றது! கழகத்தினரால் எத்தகைய சேதமோ பாதகமோ நிகழவில்லை! தூத்துக்குடியில் நடைபெற்ற கலவரத்தைக் கழகத்தின்மீது சுமத்த அரசாங்கம் முயன்றபோதிலும், பின்பு நீதி மன்றத்தில் 'தவறான குற்றச்சாட்டெனத் தள்ளப்பட்டுவிட்டது. இந்திய துணைக்கண்டத்தில் வேறெங்கும் அவ்வளவு பெரிய போராட்டம் அவ்வளவு அமைதியுடன் நடைபெற்றதில்லை.

"முட்டாள்தனம்" "காட்டுமிராண்டித்தனம்" என்று நேரு பண்டிதர் தென்னாட்டுப் போராட்டங்களைப்பற்றி, இழிமொழிகளை அள்ளித் தெளித்தபோதிலும், வடநாட்டில் நடந்த பல போராட்டங்களின்மீது அவர் அத்தகைய இழிசொற்களை வீசவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

பாட்னாவில் மாணவர்கள் தேசியக் கொடியை எரித்தார்கள். "நான்சென்ஸ்!" என்று நேரு அதைக் கண்டித்தாரா?

கல்கத்தாவில் கார்கள் கவிழ்க்கப்பட்டன, டிராம் வண்டிகள் கொளுத்தப்பட்டன. "முட்டாள்தனமானது!" எனப் பண்டிதர் முழங்கினாரா?

மொழிவழி மாநிலப் போராட்டத்தின்போது, பம்பாயில் செருப்புகள் வீசியெறியப்பட்டன. தலைவர்களின் படங்களுக்குச் செருப்பு மாலைகள் போடப்பட்டன. "காட்டுமிராண்டித்தனமானது" என இந்தகண்ணியவான் அறிக்கை விட்டாரா?

ஒரிசாவில் கடைகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டன, பண்டங்கள் சிதறடிக்கப்பட்டன.



"அநாகரிகமானது!" என்று பிரதமர் அதைப்பற்றிப் பேசினாரா?

இவர் பேசிய கூட்டத்தில், குஜராத் மாணவர்கள் கூச்சலிட்டுப் பேசவொட்டாமல் தடுத்தபொழுது, "மிகப்பெரிய கூட்டங்களில் நான் பேசியிருக்கிறேன்! வெளிநாடுகளில் என் பேச்சை ஆர்வத்துடன் கேட்கிறார்கள்! கூச்சல் போடாதீர்கள், நான் சொல்வதைச் சற்று கேளுங்கள்!" என்று இந்தப் பெரியவர் அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாரேதவிர, "நான்சென்ஸ்! பேசாமலிருங்கள்!" என்று அதட்டினாரா?

ஆமதாபாதில் கிளர்ச்சிக்காரர்கள் ஒரு மந்திரியின் மகனைத் தூக்கி, மாடியிலிருந்து கீழே போட்டார்கள். அதைப் பார்த்து "காட்டு மிராண்டித்தனமானது" என்று பண்டித நேரு கண்டித்தாரா? இல்லை.

தென்னாட்டில் எதிர்ப்பு வந்தபொழுது "முட்டாள்தனம்!" "காட்டு மிராண்டித்தனம்!" என்று கூச்சலிட்ட நேரு பண்டிதர், வட நாட்டில் நடந்த கிளர்ச்சிகளில் ஏற்பட்ட தாறுமாறுகளைக் கண்டித்து ஏன் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை? எதிர் வீட்டுக் குழந்தை அழுதால் எரிச்சல் கொண்டு திட்டுபவன் தன் வீட்டுக் குழந்தை அழுதால் தட்டிக்கொடுத்துச் சமாதானம் செய்ய முயலுவதைப் போல, தென்னாட்டில் எதிர்ப்பு தோன்றினால்-அது எவ்வளவு நியாயமானதாக இருந்த போதிலும் - பண்டிதநேருக்குப் பொல்லாத கோபம் வருகிறது, எரிந்து விழுகிறார், ஏசிப்பேசுகிறார். ஆனால் தென்னாட்டில் நடைபெறுவதைவிடக் கடுமையான, பலாத்காரம் கூடிய நிகழ்ச்சிகள் வடநாட்டில் நிகழ்ந்தால், அதைச் சமாதானப் படுத்த பண்டிதர் முயலுகின்றாரே அன்றி, கோபமோ, எரிச்சலோ உண்டாவதில்லை. ஒன்று தென்னாட்டினரிடம் தனது கோபம் உண்டாக்குகிற அளவு பயத்தை வடநாட்டில் உண்டாக்காது என்று அவர் நினைத்திருக்கவேண்டும். இல்லையென்றால், வடநாட்டைக் கோபிக்க அவருக்கு மனமில்லாமலிருக்க வேண்டும்.

டில்லி ஏகாதிபத்தியத்தின் அலட்சியப் போக்கைக் கண்டிக்க ஜுலை 15ல் இரயில்கள் நிறுத்தப்பட்டன.

வடநாட்டு முதலாளிகள் தென்னாட்டைத் தங்களின் சந்தைக்காடாக்கும் போக்கைக் கண்டிக்க கல்லக்குடி போராட்டம் நடைபெற்றது.

நாட்டுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கவனப்படுத்தவும், ஆதிக்கக்காரர்களுக்கு அபாய அறிவிப்பைத் தரவும், அந்தப் போராட்டங்கள் நடந்தன.

வடநாட்டு பொருளாதார முதலாளித்துவத்தை நாம் எதிர்க்கிறோம். அதே சமயத்தில், டில்லியில் வளர்ந்துள்ள அரசியல் முதலாளித்துவத்தையும் நாம் எதிர்க்கிறோம். 1953 ஜுலை 15ல் நடந்த போராட்டம் அதை நன்கு புலப்படுத்தியது.

அரசியல் பொருளாதார சமுதாயத் துறைகளில் திராவிடத்தின்மீது போடப்பட்டிருக்கும் தடைகளை நீக்கிட, திராவிடம் தொடுக்கும் நீண்ட போராட்டத்தின் ஆரம்பம் ஜுலை 15! அந்த நாளை நினைவு கூறி கொண்டாடும்பொழுது, நாமெ டுத்த குறிக்கோள்களை செய் முடிக்கும் உறுதியை மே கொண்டு, கண்ணியமும் கட்டுப்பாடும் சிறந்திடும் வகை கடமையாற்றுவோமாக! வாழ்க திராவிடம்! வாழ் வீரர்கள்!

திட்டத்தில் மாறுதல்!

—(0)—

செய்வதைத் தவிர வேறு வழியில்லை

—(0)—

திட்டத்தை உருவாக்கிய சி. டி. தேஷ்முக் கூறுகிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு, இப்பொழுதுள்ள நிலையில் அரசாங்கத்தின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதைப் பலர் எடுத்துக் காட்டினார்கள். திட்டத்திற்கு எதிர்பார்த்தபடி பணம் சேர்க்க அரசாங்கத்தால் முடியவில்லை. வெளிநாட்டு உதவி திட்டத்தினர் எதிர்பார்த்த அளவு கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாகி விட்டது. திட்டக்குழுவினர் எதிர்பார்த்தபடி, வெளிநாட்டு உதவி 800 கோடி ரூபாய் கிடைத்தாக வேண்டும். அந்த அளவு கூட, திட்டத்தின் அளவு 4800 கோடி ரூபாயாக இருந்தபொழுது. இப்பொழுது விலையேற்றத்தாலும், மற்ற பிரிவுகளாலும் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 4800 கோடியிலிருந்து 6000 கோடி ரூபாயாகிவிட்டது. ஆக வெளிநாட்டு உதவி 1000 அல்லது 1200 கோடி பெற்றாகவேண்டும், ஆனால் வெளிநாட்டு உதவி இவர்கள் எதிர்பார்த்தது வருவதாக இல்லை. இந்தியப் பிரதமர் பண்டிதநேரு இலண்டனில் நேரில் பார்த்துக் கேட்டும், 10 கோடி பவுன் கடன் (அதாவது 130 கோடி ரூபாய் கடன்) கிடைக்கும் போலிருக்கிறது. அதுவும் "கிடைக்கலாம்" என்ற நம்பிக்கைச் செய்தியாக இருக்கிறதேயன்றி, உறுதிப்படுத்தவில்லை. இங்கிலாந்திலிருந்து அதிகமாக பெறக்கூடியது அந்த அளவு தான் இருக்கும். அந்தக் கடனுக்கு வட்டியாக 8 கோடி ரூபாய் கட்டவேண்டியிருக்கும்!

வரிச்சுமையாலும் விலை உயர்வாலும், பற்றாக்குறை வரவு-செலவுத்திட்டங்களாலும், இந்தியாவின் பொருளாதார நிலை மிகவும் சீர்கேடடைந்துள்ளது. இந்த நிலையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை போட்ட அளவிலேயே நிறைவேற்ற முடியாது.

கோகலே மண்டபத்தில் 10ம் தேதியன்று பேசிய சி. டி. தேஷ்முக் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மாற்றியமைப்பதைத் தவிர்க்க முடியாது. திட்டம் போடும் பொழுது எதிர்பார்த்தபடி திட்டத்திற்காக நிதி சேருமென்று, இப்பொழுதுள்ள சூழ்நிலையில் தோன்றவில்லை. அதனால் ஒன்று திட்டத்தைக் குறைத்தாகவேண்டும், இல்லையென்றால் திட்டக்குழுவினர் எதிர்பார்த்ததைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாக மக்கள் தங்களை குறுக்கிக் கொள்ள வேண்டும்.

திட்டமிட்டபடி, நாட்டின் மொத்தச் செல்வம் பெருகவில்லை. பெரும்பாலானவர்கள் கடைசி குறைந்த அளவு வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பதால், திட்டத்தை நிறைவேற்ற அவர்களைத் தியாகம் செய்யச் சொல்லமுடியாது. திட்டத்தின் கணக்குகள் போட்டதற்கும் இப்பொழுது உள்ளதற்கும் பெருத்த மாறுதல்களை அடைந்திருக்கின்றன. ஆகையால் திட்டத்தை முழுவதும் திருத்தியமைப்பதோ அல்லது இருப்பதில் மாற்றங்களைச் செய்வதோ தவிர வேறு வழியில்லை. அது தவிர்க்கமுடியாதது. திருத்தங்கள் மாற்றங்களையும் செய்யும் பொழுது கவ

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 14—7—57 சென்னை

ஆட்டத்தின் மத்தியில் "அம்பேல்"!

★ ஆசிரியர் நெடுஞ்செழியன்

சென்னை மாநிலத்தின் நிதிமந்திரியாகவும், மதிமந்திரியாகவும் உள்ள கனம் சுப்பிரமணியம் "பத்தாண்டு அவகாசம்" கேட்கிறார். வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளிக்க முன்வந்த கனம் மந்திரியார், "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பத்தாண்டு காலம் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு தமிழ்நாட்டில் முக்கியமான பெரிய தொழில்களை ஏற்படுத்துவதில் அரசாங்கத்துடன் முழுமையும் ஒத்துழைக்கவேண்டும்" என்று கேட்டுள்ளார்.

ஒரு போரின் மத்தியில், சமரசத்தைப் பேச போர் நிறுத்த உடன்பாடு நிகழ்வதைப்போல, "பத்தாண்டுக் காலத்துக்குப் போர்நிறுத்த உடன்பாடு" வேண்டுமென்று கனம் சுப்பிரமணியம் விரும்புகிறார்.

ஒரு நாட்டின் வரலாற்றில் பத்தாண்டுக்காலம் என்பது ஒரு குறுகிய அளவுதான். "பத்தாண்டு காலம் பிரிவினையை வலியுறுத்தாதீர்கள்" என்று கனம் சுப்பிரமணியம் அவகாசம் கேட்கும்பொழுது, இரண்டு கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில்களைத் தரவேண்டும்.

ஒன்று, பத்து ஆண்டுகளுக்கு அவகாசம் கிடைத்தால், என்னென்னபலன்களை எதிர்பார்க்கிறார்கள்என்பதற்கும், அவ்வாறு எதிர்பார்ப்பவைகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதற்கு என்ன நம்பிக்கை அறிகுறிகள் இருக்கின்றன என்பதற்கும் தெளிவான அடிப்படை இருக்கவேண்டும்.

இரண்டாவது, இதுவரைக் கிடைத்த பத்தாண்டு அவகாசத்தில், என்னென்ன செய்து முடித்திருக்கிறார்கள் என்பதும் தெரியவேண்டும். 1947லிருந்து இந்தியாவுக்கு விடுதலை உரிமை கிடைத்துப் பத்தாண்டுகள் ஆகப்போகிறது. இந்தப் பத்தாண்டுக் காலத்தில், மாநிலத்திலும் மத்திய அரசாங்கத்திலும், காங்கிரசுதான் அரசோச்சி வந்தது. குறிப்பிடத்தக்க எதிர்ப்பு எதுவும் கிடையாது. திட்டங்களைப் போடுவதிலும், திட்டத்துக்கான நிதிகளைச் சேர்ப்பதிலும், திட்டங்களை நிறைவேற்றுவதிலும், காங்கிரசுக் கட்சியும் அதன் அரசாங்கமும் முழுப்பொறுப்பைப் பெற்றிருந்தன. அவர்களுடைய ஆதிக்கத்தையும் வேலைத் திட்டங்களையும் தடைசெய்யுமளவுக்கு எதிர்ப்பு வளரவில்லை. எனவே பத்தாண்டுக்காலத்தில் மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கத்திலும் கனம் சுப்பிரமணியத்தின் கட்சியினரே பலம் பெற்று வந்திருந்தனர். அவர்கள் விரும்பியிருந்தால் தென்னாட்டின் தொழில் வளர்ச்சியை யாரும் தடைசெய்திருக்கமாட்டார்கள். அதிலும் தென்னாட்டின் தொழில்வளம் பெருகவேண்டும் என்று கூறுகிற நாமா தடைசெய்திருக்கப் போகிறோம்!

பத்து ஆண்டுக் காலத்துக்குப் போராட்டத்தைத் தவிர்த்து, "தமிழ்நாட்டின் முக்கிய, கனரகத் தொழில்களைப் பெருக்குவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒத்துழைக்கவேண்டும்" என்று கூறுவதால், ஏதோ முன்பெல்லாம் தமிழ்நாட்டின் தொழில்கள் பெருகத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பாக இருந்தது போலல்லவா படுகிறது!

சென்னை மாநில அரசாங்கம் போட்ட எந்தத் திட்டம் நம்மால் கெட்டுவிட்டது?

நெய்வேலித் திட்டத்தைப் பெரிய அளவில் காங்கிரசு அரசாங்கம் ஆரம்பிக்க, நாம் தடைசெய்து அதை நடக்கவொட்டாமற் செய்துவிட்டோமா?

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையையும் அலுமினியத் தொழிற்சாலையையும் இவர்கள் ஏற்படுத்த முயன்றபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்த்துக் கிளர்ச்சிசெய்து "இவ்வளவு தொழில்கள் தமிழ்நாட்டில் கூடாது" என்று தடுத்தார்களா?

காவிரி வட்டத்தில் எண்ணெய்க் கிணறுகள் தோண்ட அவர்கள் செய்த முயற்சிகளை, நமது கழகம் எதிர்ப்பைக் காட்டிக் கெடுத்துவிட்டதா?

அரசாங்கம் போட்ட எந்தத் திட்டத்துக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தால் கேடு வந்தது? அவர்கள் நடத்திய எந்த ஆக்க வேலைகளுக்கு நமது கழகத்தால் ஆபத்து வந்தது?

வந்த திட்டத்தில் எதற்கும் நம்மால் கேடு உண்டானதில்லை. நம்முடைய குறையெல்லாம் தென்னாட்டுக்குப் பெரிய திட்டங்கள் எதுவும் தரப்படவில்லை என்பதுதான்!

செய்த காரியங்கள் எதையும் நாம் எதிர்க்கவில்லை. ஆனால் செய்யவேண்டிய காரியங்கள்-இங்கு செய்யக்கூடிய நல்ல ஆக்கவேலைகள் பலபல இருக்கின்றன, அவை செய்யப்படவில்லையென்றுதான் நாம் சுட்டிக்காட்டுகிறோம். அவை செய்யப்படாமல் இருக்கும் காரணத்தையும் கூறுகிறோம். திட்டங்களைப்போடும் அதிகாரம், திட்டங்களுக்கானப் பணத்தைப் பெறும் வசதி, திட்டங்களை நிறைவேற்றும் உரிமை வடநாட்டு ஆதிபத்தியக்காரர்களிடம் சிக்கியிருக்கின்ற காரணத்தால், போடுகின்ற திட்டங்களெல்லாம் வடநாட்டைவளர்க்கப் பயன்பட்டனவேயன்றி, தென்னாட்டுக்கு உதவவில்லை.

கடந்த பத்தாண்டுகளில் நமக்குக் கிடைக்காத உரிமைகள், திட்டங்கள், இனி வரப்போகிற பத்தாண்டுகளில் கிடைக்கும் என்பதற்கு என்ன அறிகுறிகள் இருக்கின்றன. டில்லி அரசாங்கத்திற்கு திடீரென்று எந்த வகையில் மனமாற்றம் ஏற்பட்டு, தென்னாட்டின்மீது கருணை பிறக்கப்போகிறது?

பிரிவினையால் வெளிநாட்டு உதவி கிடைக்காமற்போகுமென்று கனம் சுப்பிரமணியம் கூறுகிறார். பிரிந்துபோன பல நாடுகள் வெளிநாட்டு உதவியைப்பெற்றும் பெருமனும் நம்மைவிட உயர்ந்த நிலையில் இருப்பதை நாம் காட்ட முடியும்.

சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாடும்பொழுது, களைத்துப்போன ஒருவன் பிடிக்க வருபவனிடம் தப்பித்துக் கொள்ள முடியாமல் கடைசி நேரத்தில் "அம்பேல்!" என்று கூறி நின்றுவிடுவான். "அம்பேல்!" சொல்லிவிட்டவனைப் பிடிக்கக்கூடாது. சில சமயங்களில் "அம்பேல்!" சொன்னவன் மீண்டும் ஆட்டத்துக்கு வரும்வரை விளையாட்டுத் தடைப்பட்டு நிற்கும். அதைப்போல, பத்தாண்டுக்கு "அம்பேல்!" கூறி, ஆட்டத்தைத் தடைப்படுத்த சுப்பிரமணியம் அவர்கள் பார்க்கிறார். ஆட்டம் அவர் இல்லாமலே ஆரம்பிக்கப்பட்டது, அவர் கலந்து கொள்ளும்பொழுது தாராளமாக வரட்டும், வரவேற்போம். ஆனால் அதற்காக அதுவரை நிறுத்திவைக்கவேண்டிய தேவையில்லை.

கனம் சுப்பிரமணியம் சொல்லியதில் ஒரு பகுதி நமக்கு மகிழ்ச்சியூட்டுவதாயிருக்கிறது, "பத்தாண்டு காலத்திற்குப் பின்னும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லையென்றால், நாங்களும் உங்களுடன் சேர்ந்து பாடுபடுவோம்!" என்று அவர் சொல்கிறார். பத்தாண்டு காலத்தில், இந்திய அரசாங்க ஆதரவில் தமிழ்நாடு முன்னேறும் என்பது அவரது எண்ணம். அந்த நல்ல எண்ணத்திற்குத் தடையாக நாங்கள் இருக்கவில்லை. நாம் நமது போக்கில், நாமெடுத்த தூய பணியை - உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து செய்வோம், பத்தாண்டுக்காலம் அவரும் தாம் எதிர்பார்ப்பதுபோல நடக்கிறதா என்று பார்க்கட்டும். அப்படி நடந்தால், நமக்கொன்றும் நஷ்டமில்லை. இல்லையென்றால், அவர் நம்முடன் சேர்ந்துகொள்ளட்டும். அவர்கள், இப்பொழுதில்லையென்றாலும் பத்தாண்டுக்காலம் கழித்தாவது நிச்சயம் நம்முடன் சேர்ந்து போராடவேண்டியிருக்கும் என்ற நம்பிக்கையைக் கனம் சுப்பிரமணியம் தந்துள்ளார். அது மகிழ்ச்சிக்குரியதே!

○

வினா : "நமது ராஜ்யத்தில் பெருந்தொழில்கள் வேண்டும். பெருந்தொழில் ஆரம்பிக்க வேண்டுமானால் கனரக இயந்திரங்கள் வேண்டும். இவற்றை இப்பொழுது இங்கு உற்பத்தி செய்ய முடியாது. உற்பத்தி செய்வதாக இருந்தால் நீண்டகாலம் பிடிக்கும். ஆகையால் அயல் நாட்டிலிருந்து நாம் இவற்றை வாங்கவேண்டும். இதற்கு அயல்நாட்டுச் செலவாணி வேண்டும். ஒன்றுபட்ட இந்தியாவால் தான், ஒன்றுபட்ட சக்தியால்தான் இதை நாம் சாதிக்க முடியும். ஆகையால் நாட்டின் எல்லையைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை பத்து வருடங்களுக்கு இந்தப் பேச்சு வேண்டாம், இந்தப் பேச்சைத் தற்காலிகமாக ஒத்திப் போட வேண்டும். தென்னிந்தியாவைக் கவனிக்க வில்லை, புறக்கணிக்கின்றனர் என்று பின்னர் தெரிந்தால் எல்லோருமாகச் சேர்ந்து வேண்டுமானால் கூச்சல் போடலாம் ; பிரிவினைக்கு வேண்டுமானால் போராடிக்கொள்ளலாம்." என்று சென்னை நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சட்ட மன்றத்தில் கூறியுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம் : *திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றி எண்ணுவதும், பேசுவதுமே முட்டாள் தனமாகும் என்று இதுகாறும் பகன்றுவந்த தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினைப் பேச்சைப் பத்து ஆண்டுக் காலத்திற்கு ஒத்திப்போட்டு வைத்து, பிறகு வேண்டுமானால் அது பற்றிக் கூச்சல் போடவும், போராடவும் செய்யலாம் என்று கூறிடும் அளவிற்கு இப்பொழுது வந்திருப்பது, அந்த வகையில் மகிழ்ச்சித்தரத்தக்கதே யாகும். பிரிவினையைப் பற்றி அறவே ஏற்றுக் கொள்ளாத ஒருவர், பத்து ஆண்டுக் காலத்திற்குப் பிறகு வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம் என்ற அளவிற்கு வந்திருப்பது வியப்புக்குரிய ஒன்றேயாகும். காலம் அவரை அந்த அளவிற்குத்தான் இப்பொழுது மாற்றியிருக்கிறது ; போகப்போகப் பெருமளவிற்கு அவரை மாற்றும் என்பதில் ஐயமில்லை.*

'வேண்டுமானால்' பத்து ஆண்டுக் காலத்திற்குப் பிறகு போராடலாம் என்று அமைச்சர் கூறுகிறார். திராவிட நாட்டுப் பிரிவினை 'வேண்டுமா?' 'வேண்டாமா?' என்பதைப் பற்றி அறுதியிடும் காலம் பத்து ஆண்டுக்குப் பிறகு தான் ஏற்படுகிறது என்பது அமைச்சரின் கருத்து. இப்பொழுதுள்ள சூழ்நிலைகளே திராவிட நாட்டுப் பிரிவினை 'வேண்டும்' என்பதை மிகவாக வலியுறுத்துவனவாக அமைந்திருக்கின்றன, இதற்காகப் பத்து ஆண்டுக் காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று நாம் கருதுகிறோம். அதற்கான காரணகாரிய விளக்கங்களைத் தெளிவாகவும், திட்பமாகவும் ஆயிரக் கணக்கில், ஏடுகளின் மூலமும், இதழ்களின்மூலமும், கூட்டங்களின் வாயிலாகவும் மக்களுக்கு எடுத்துக்கூறி வந்திருக்கிறோம்.

நாட்டுப் பிரிவினைப் பேச்சைப் பத்து ஆண்டுக் காலத்திற்கு ஒத்திப் போடவேண்டும் என்பதற்கு அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கூறும் காரணங்கள் தாம் வேடிக்கை பயப்பனவாக இருக்கின்றன. இந்தியா ஒன்றாக இருந்தால் தான் அயல்நாட்டு உதவிகள் கிடைக்கும் ; அயல் நாட்டு உதவிகள் கிடைத்தால்தான் கனரகத் தொழில்களைத் தென்னாட்டில் ஏற்படுத்த முடியும், என்று அமைச்சர் வாதாடுகிறார். அமைச்சரின் வாதம் எவ்வளவு அறியாமை நிரம்பியது என்பதை, உலகிலுள்ள சின்னஞ்சிறு நாடுகளின் முன்னேற்றத்தை உற்றுநோக்கினால் புரிந்துகொள்ளலாம்.

ஐரோப்பிய நாடுகளிலே பலவும், சப்பான் போன்ற நாடுகளும் அயல்நாடுகளின் உதவியைப் பெறாமலேயே கனரகத் தொழில்களை ஏற்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கி உயர்ந்தோங்கி வருகின்றன. சப்பான் நாட்டில் இரும்பு இல்லை ; அப்படி யிருந்தும் பல வகையான பொறிகளையும் உற்பத்தி செய்து அது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டே யிருக்கின்றது. இங்கிலாந்தில் பருத்தியில்லை ; அப்படி யிருந்தும் அது பருத்தி துணியை நெய்து உலக நாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது. வெறும் ஆடு, மாடுகளை வைத்துக்கொண்டிருக்கிற டென்மார்க்கும், வெறும் ஊசி இலை மரக்காடுகளை வைத்துக்கொண்டிருக்கிற பின்லாந்தும், ஆலந்து - பெல்ஜியம் - ஆஸ்ட்ரியா, ருமேனியா, சுவிட்சர்லாந்து போன்ற சின்னஞ்சிறு நாடுகளும் எவ்வளவோ முன்னேறி வந்திருக்கின்றன. அவை அயல்நாடுகளின் உதவிகளைப் பெறாமும், பெறாமலும் முன்னேறி வருகின்றன. அவற்றைத் திராவிடத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவையெல்லாம் மிகச் சிறிய நாடுகள் என்பதை எவரும் அறிந்து கொள்வர்.

பின்னடைந்து கிடக்கும் கிழைநாடுகளெல்லாம் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற அயல்நாடுகளின் உதவிகளைப் பெற்றால்தான் வளர முடியும் என்ற நிலையில் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டி, அப்படி உதவி பெறும் போது இந்தியா ஒரே நாடாக, ஒரு பெரும் நாடாக இருந்து கேட்டால்தான் உதவி கிடைக்கும் என்று அமைச்சர் வாதாட முன்வருகிறார் என்றால் அதிலும் அறியாமை பொதிந்து கிடப்பதைக் காணலாம். நாம் கேட்கும் திராவிடம் ஏறத்தாழ ஒன்பது கோடி மக்களைக் கொண்ட நாடாகும். பாக்கிஸ்தான் ஏறத்தாழ பத்து கோடி மக்களைக் கொண்டிருக்கிறது. பாக்கிஸ்தான் இந்தியாவை விட சிறிய நாடு என்பதற்காக அமெரிக்கா, பிரிட்டன்போன்ற அயல்நாடுகள் அதற்கு உதவி வழங்காமலா இருந்துவிட்டன? இந்தியா பாக்கிஸ்தானைவிட மூன்று மடங்கு பெரிய நாடு என்பதற்காக இந்தியாவிற்கு உதவி பல மடங்கு பெருகியா விட்டது? அல்லவே! இந்தியா அயல் நாடுகளிடம் பெற்றிருக்கும் உதவிகளை விடப் பாக்கிஸ்தான் பல மடங்கு அதிக உதவிகளைப் பெற்றிருக்கிறதே! இந்தியா பெறாத உதவியைப் பாக்கிஸ்தான் அமெரிக்காவிடம் பெற்றிருக்கிறதே! அது போல திராவிடம் தனியாகப் பிரிந்து, அயல் நாடுகளுடன் திறமையாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தினால் நேர்மையான உதவிகளைத் தேவையான அளவுக்குப் பெறலாமே! ஒரு நாடு அயல் நாடுகளின் உதவியைப் பெற நேர்மையான காரணங்களையும், சிறந்த அறிவு ஆற்றலையும், நல்ல நட்புறவையும் பெற்றிருக்கவேண்டுமேயொழிய பரப்பளவில் பெரிதாகவோ, மக்கள் எண்ணிக்கையில் பெரிதாகவோ இருக்கவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை என்பதை பல சின்னஞ்சிறு நாடுகள் இற்றைப்போது விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கின்றன. ஒரு கோடி மக்களுக்குக் குறைவாகவுள்ள பல நாடுகள் அயல் நாடுகளிடமிருந்து ஏராளமான உதவிகளைப் பெறும்போது, ஒன்பது கோடி மக்களைக் கொண்ட திராவிடம் தனியே பிரிந்து அத்தகைய உதவிகளைப் பெற முடியாதா? நன்றாகப் பெற முடியும்!

தென்னாட்டையும சேர்த்த பரந்த இந்தியாவை ஒரே நாடாக் காட்டி அயல் நாடுகளிடமிருந்து பெறும் உதவிகள், இப்பொழுது தென்னாட்டிற்காவது பயன்படுத்தப்படுகின்றனவா என்றால், அதுவும் இல்லை. அவ்வளவும் வட நாட்டிற்கே தான் பயன்படுத்த... படுகின்றன. அகில இந்தி... தேசியம் அயல் நாட்டு உதவி... களை வட நாட்டுக்கு வாங்கி... தரத்தான் இதுவரையில் பயன்... பட்டு வந்திருக்கிறதே யல்லா... மல், தென்னாட்டை வளப்படு... தப்பயன் பட வில்லை, இனியு... பயன் படும் என்று எதி... பார்ப்பதற்கில்லை. இன்னு... பத்து ஆண்டுக் காலத்திற்கு... நாம் வாய் மூடிக்கிடந்தால்... மேலும் மேலும் வரும் அய... நாட்டு உதவிகள், வட நா... டிற்குத்தான் போய்ச்சேரு... ஒழிய தென்னாட்டிற்கு வரு... என்று எப்படி எதிர்பார்க்... முடியும்?

இரண்டாவது ஐந்தாண்டு... திட்டத்தை நிறைவேற்ற இ... தியப் பேரரசின் பங்காகச் செல... வழிக்க இருந்த தொகை... ரூ 4800 கோடியாகும். இ... பொழுது அது ரூ 6000 கோடி... யாக உயர்த்தப்பட்டிருக்கிறது... இந்தத் தொகையில் அய... நாட்டு உதவியாக எதிர்பார்... கப்படும் பணம் ரூ 800 கோடி... யாகும். இந்த எதிர்பார்க்க... படும் தொகையில் எவ்வளவு... கிடைக்குமோ தெரியவில்லை... அப்படியே ஓரளவு தொகை... கிடைக்கப் பெற்றாலும், அ... முழுவதும் வடநாட்டில் ப... திட்டங்களை நிறைவேற்று... தற்குப் பயன் படுத்தும் வகை... யில் தான் இரண்டாவது ஐ... தாண்டுத்திட்டம் தீட்டப்பட்டி... ருக்கிறது. உள்நாட்டில் திர... டப்படும் ரூ 5200 கோடியி... லேயே உரிய பங்கு திராவிடத்... திற்குக் கிடைக்காதபோது... அயல் நாட்டு உதவி நிதியில்... ருந்தா கிடைக்கப் போகிறது... எனவே அயல் நாட்டு உதவி... யைக் காட்டிப் பிரிவினைப்... பேச்சை ஒத்தி வைக்கும்படி... யாக அமைச்சர் கூறுவது... வெறும் கேலிக் கூத்தாகுமே... ஒழிய, உருவான பயனை அளி... கப்போவதில்லை.

திராவிட முன்னேற்றக் கழ... கம் ஒரு வலிவுள்ள-வளர்ச்சி... யுள்ள கழகமாக இருந்து கூ... குரல் இடும்போதே, திராவிட... புறக்கணிக்கப்பட்டு வருகிறது... என்றால், கூக்குரலைப் பத்... ஆண்டுக் காலத்திற்கு நிறுத்தி... விட்டால் திராவிடம் மேலு... மேலும் புறக்கணிக்கப்படு... என்பதில் எள்ளளவும் ஐய... கொள்ளவேண்டிய அவசியமே... ஏற்படாதே! பத்து ஆண்டு... காலம் பொறுத்திருந்தால்... திராவிடம் மேலும் சீர்குலை... நேரிடுமே ஒழிய, உருவான... பலன் ஏற்படாது.

திராவிடத்தைப் பிரிப்பதற்... கான கூக்குரல் எழுப்பவேண்... டிய காலமும், அதற்காகப்... போராட வேண்டிய காலமும்... இதுவே ஆகும் என்பதையும்... அதற்காகப் பத்து ஆண்டு... காலம் பொறுத்திருக்கவேண்... டிய அவசயம் இல்லை என்ப... தையும், பொருத்திருந்தால்... நிலைமை மேலும் சீர்கெடு... என்பதையும் அமைச்சர்... சி. சுப்பிரமணியம் அவர்கள்... இனியேனும் உணருவாராக!

—இரா. செ...



சோகம்

இரா. செழியன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சந்தானமும் டாக்டர் பொன்னையாவும் சாய்வு நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். பொன்னையா சிகரெட் பிடிக்க ஆரம்பித்தார். புகை மெதுவாக மேலே எழுந்து, காற்றுடன் கலந்து, கரைந்துபோனது. சந்தானம் வேறு உடையில் இருந்தார். கழுத்தைச் சுற்றி, மெல்லிய கம்பிளியைச் சுற்றி, முழுக்கைச்சட்டையுடன் அவர் இருந்தார். அடிக்கிற குளிர் காற்று அவருக்குப் பிடிப்பதில்லை. அவர்கள் உட்கார்ந்திருந்த அறை அடக்கமாக, கதகதப்பாக இருந்தது. மூன்று அலமாரிகளில் புத்தகங்கள் நிறைந்திருந்தன. மத்தியில் பெரிய வானொலிப் பெட்டியிருந்தது. அதற்குப் பக்கத்தில் புதிய மலர்க் கொத்துகள் சொருகப்பட்ட வேலைப்பாடான குவளை இருந்தது. வசதிகளின் நிறைவு அங்கு காணப்பட்டது. நீதிபதியின் வீடு என்பது காப்பாற்றப்பட்டது.

சந்தானம் தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

"அது 1931ல் நிகழ்ந்தது. அப்பொழுது எனக்கு வயது இருபத்துநான்கு இருக்கும். சட்டக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுத் திரும்பியிருந்தேன். என் அப்பா அப்பொழுது—மாவட்டத்தில் கலெக்டராக இருந்தார். அந்த நகரத்திற்கு நான் அதற்குமுன் வந்ததில்லை. கோடை கடுமையாயிருந்தது. பகலில் வீட்டில் எந்தப் பக்கம் இருந்தாலும் வெப்பமானகாற்றுவீசும். மாடியில் ஒரு அறையில் நான் பேசாமல் அடைந்து கிடப்பேன். காலையில் வருகிற பத்திரிக்கைகளில் இருக்கும் எழுத்துக்களை ஒன்று விடாமல் படித்து முடிப்பேன். பக்கத்தில் ஒரு நூல் நிலையம் இருந்தது.

ஒரு வயதானவர் - அறுபது வயதுக்குமேலிருக்கும்-அதைப் பார்த்து வந்தார், அங்கிருந்த புத்தகங்கள் அவரைவிட அதிக வயதுடையவைகளாயிருந்தன. ஏடுகள் மக்கி, பழமையின் வாசனையை வீசிக்கொண்டிருந்தன. வீட்டு வேலைக்காரன் அங்கிருந்து சில புத்தகங்களை வாங்கிவருவான். அவற்றையும் படித்துத் தீர்த்துவிடுவேன். சோம்பல் அதிகமானது, அம்மா தன் ஒரே மகனின்மீது எல்லா வசதிகளையும் கவனிப்புகளையும் குவித்தார்கள். அதிகமாகச் சாப்பிட்டேன், நீண்ட நேரம் தூங்கினேன். அப்பா வந்துவிட்டால், அவருடைய காரை எடுத்துக்கொண்டு போவேன். ஊரிலிருந்து ஐந்து மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஆறு வரைப் போய்த் திரும்புவேன். ஒரு மாதத்துக்கப்புறம் அலுப்புத் தட்டியது.

மீண்டும் சென்னைக்குப் போய்விடலாமெனத் தோன்றியது. ஆனால் அம்மா ஒத்துக்கொள்ளவில்லை. அந்தச் சமயத்தில் என் கவனம் வேறு வழியில் திரும்பியது.

மேல் திறந்த மாடியில் உலாவிக் கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் மாலை, இரண்டு வீடுகளுக்கு அப்பாலிருந்த ஒரு மாடியில் ஒரு பெண் இருப்பதைப் பார்த்தேன். அவள் தன் தலைமயிரைக் கோதிக்கொண்டிருந்தாள். அவள் ஏதோ பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள். உதடுகள் அசைவது மட்டும் தெரிந்ததேயன்றி, பாட்டு என் காதில் விழவில்லை. தலையை ஒருபுறம் சாய்த்துக்கொண்டு மாடியில் ஒரு முனையிலிருந்து நடப்பது, பின் மற்றொரு பக்கம் தலையைச் சாய்த்துக்கொண்டு திரும்பிவருவது, சில சமயங்களில் ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் முன்னால் போவது, அவளைப் பார்க்கும்பொழுது வேடிக்கையாக இருந்தது. ஒருசமயம் அவள் திரும்பி வரும்பொழுது நான் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்துவிட்டாள், உடனே தலையைத் தாழ்த்திக்கொண்டு கீழே போய்விட்டாள்.

மறுநாள் மாலை அவள் மாடியில் இருந்தாள். என்னைப் பார்த்ததும் போய்விட்டாள். நான் சிறிது நேரம் காத்திருந்தேன். அவளைத் திரும்பக் காணோம். அடுத்த நாள் அவள் என்னைப் பார்த்ததும் ஓடிப் போகவில்லை. அவள் கையில் ஒரு புத்தகம் இருந்தது. நான் பார்க்கும் சமயங்களில் அவள் தன் புத்தகத்தைப் பார்த்துக் கொள்வாள். இருட்டுகிற வரையில் அவள் 'அவ்வாறு' படித்துக்கொண்டிருந்தாள்.

நாள்தோறும் மாலை நேரத்தில் நான் மேல்மாடிக்குப் போவேன், அவள் அங்கு இருப்பாள். நாள் முழுவதும் வேறுவேலை இல்லாத எனக்கு, அது பொழுதுபோக்காக இருந்தது. வரவர மாலை நேரம் எப்பொழுது வருமென்று காத்துக் கொண்டிருக்க ஆரம்பித்தேன். வெளியில் காரில் போவதைக் கூட நிறுத்திக் கொண்டேன். அம்மாவுக்குக் கூட ஆச்சரியமாயிருந்தது. கார் கிடைத்தால், காலை நேரத்தில் போய்வருவேன். இல்லாவிட்டால், அப்பா கச்சேரி வரைப் போய்விட்டுத் திரும்புவேன். காரை ஓட்டுவதில், அதிலும் மாலை நேரத்தில் முன்பிருந்த ஆர்வம் கிடையாது. நாங்கள் 'சந்திப்பதில்'—அதுதான் தூர இருந்து பார்த்துக்கொள்வதில்-ஒரு மாறுதல் நிகழ்ந்தது. நான் பார்த்தால் அவள் ஒரு ஓரத்தில் மறைந்து கொள்வாள். நான் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு, கண்காணித்தபடி இருப்பேன். அவள் மெதுவாகத் தலையை நீட்டி வெளியே வருவாள். நானும் மெதுவாக வெளிவருவேன். அவள் சிரித்துக் கொண்டு மீண்டும் மறைந்து கொள்வாள். இதைப்போல ஒளிந்து கண்டுபிடிப்பது சில காலம்நடந்துகொண்டிருந்தது.

'அவளைப்'பற்றி முன் பிருந்ததைவிட அதிகமான அக்கறை காட்ட ஆரம்பித்தேன். அவள் யார்? அவள் இருக்கிற வீடு இவைகளைப் பற்றி ஆராயத் தலைப்பட்டேன், அவளுடைய தாத்தா - அம்மாவின் அப்பா மூன்றாவது வீட்டில் இருக்கிறார். அவர் ஒரு வக்கீல்-பெயர் சிவசண்முகம். அவருக்கு வயது அறுபதுக்கு மேலாகிய படியால் கோர்ட்டுக்கு அதிகம் போவதில்லையாம். இவையெல்லாம் வேலைக்காரன் மூலமாக, அவன் சந்தேகப்படாத வகையில் நான் தெரிந்து கொண்டது. மறுநாள் காலை ஒரு புதிய உண்மையை நான் கண்டுபிடித்தேன். அதுதான், அந்த மூன்றாவது வீட்டில் நூல்நிலையம் இருந்தது என்பது. அங்கிருந்துதான் முதலில் எனக்குப் புத்தகங்களை வேலைக்காரன் வாங்கிவந்தது. மீண்டும் புத்தகங்களைப் படிப்பதென ஆரம்பித்தேன். அதிலும் நானே போய் புத்தகங்களை வாங்கி வரக்கிளம்பினேன்.

நான் சென்றபொழுது, வக்கில் உட்கார்ந்திருந்தார். முதலில் அலட்சியமாகப் பார்த்தார், பின் கலெக்டர் வீட்டுப்பையன் என்று தெரிந்ததும், அலட்சியத்தை விட்டு மரியாதைகள் செய்ய ஆரம்பித்தார். உட்காரச் சொன்னார், புத்தகங்களைக் காண்பித்தார். அந்த நூல்நிலையத்துக்காக அரசாங்கத்திடமிருந்து மானியம் வருவது போதவில்லையென்று சொன்னார். நூல்நிலையங்களின் அவசியத்தைப் பற்றி சொன்னார், இருக்கும் ஒரு சில புத்தகங்களை எனக்குப் பொறுக்கித் தரும் பொழுது அவற்றை அவரே ஒப்பிக்க ஆரம்பித்தார். அவைகளெல்லாம் தனக்குத் 'தலைகீழ் பாடம்' என்று அவர் சொன்னார் நான் புத்தகங்களைப் புரட்டுவது, ஒரிரு பக்கம் படிப்பது இவற்றில் நேரம் போக்கினேன். ஆனால் 'அவள்' வருவதாகக் காணோம். ஏமாற்றத்துடன் நான் திரும்பினேன். 'அவசியம் அடிக்கடி வரவேண்டும்' என்று பெரியவர் கேட்டுக் கொண்டார். 'ஆகா, அதற்கென்ன ஆகட்டும்!' என்று முகமலர்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மறுநாள் காலை சென்றேன்.

இரண்டு மூன்று நாட்கள் நான் சென்ற காரியம் கைகூடவில்லை, அந்தக் கிழவர் தான் என்னை வரவேற்றுக் கொண்டிருந்தாரே ஒழிய, அந்தப் பெண் வருவதாக இல்லை. ஒரு நாள் காலை, நான் அந்த வீட்டில் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவள் உள்ளே வந்தாள்.

அவள் உண்மையிலேயே அழகாக இருந்தாள். சில பெண்கள் நூறு அடி தூரத்திற்கு அப்பாலிருந்து பார்க்கும் பொழுது அழகாக இருப்பார்கள், அருகில் சென்றால் அந்த மதிப்பீட்டைச் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் அவள் அருகில் பார்க்கும்பொழுதும் அழகாக இருந்தாள். மூக்கும் முழியுமாக என்று சொல்வார்களே, அதைப்போல எடுப்பான மூக்கு, குறுகுறுத்த கண்கள், சிவந்தகன்னங்கள், சிரிப்பு தவழும் செவ்விதழ்கள்-நான் அதிகம் வர்ணிக்கத் தேவையில்லை. அவள் ஒரு அழகி, ஒருதடவைப் பார்த்தால், மறுதடவைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையைக் கிளறும் அழகி-! நான் அங்கு இருப்பதைப் பார்த்ததும், அவள் ஆச்சரியமடைந்தாள். மேஜைமேல் இருந்த புத்தகத்தின் அளவை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள், கையிலிருந்த புத்தகத்தைத் தலை கீழாக வைத்து நான் பார்த்துக் கொண்டிருந்தேன். தன்னுடைய கல்லூரிப் பேராசிரியர் ஒருவரைப் பற்றி அவளுடைய தாத்தா பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் அன்று பேசவில்லை. திரும்பும் பொழுது அவளுடைய பெயர் சரசா என்பது மட்டும் தெரிந்தது.

மறுநாள் சரசா காத்திருந்தாள். 'தாத்தாவுக்கு இன்று இலேசாகக் காய்ச்சல்!' என்று அவள் சொன்னாள். அந்தக் காய்ச்சலை மனதிற்குள் வாழ்த்தினேன். நான் சில புத்தகங்களைப் பற்றிக் கேட்டேன். அவள் தேடிப் பார்த்தாள். புத்தகங்களைப் பற்றி அதிகமாக அவளுக்குத் தெரியவில்லை. திருச்சியில் அவள் படித்த கல்லூரியில் பெரிய நூல்நிலையமிருப்பதாகச் சொன்னாள். 'இதைப்போலல்ல இங்கே இருநூறு முன்னூறு புத்தகங்கள் கூட கிடையாதே. அங்கு முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் புத்தகங்கள் இருக்கும்!' என்றாள். 'அப்படியா!' என்று நானும் ஆச்சரியத்துடன் கேட்டேன். 'ஆமாம்!' என்று பெரு

மையுடன் அவள் பதிலளித்தாள்.

ஒருமணிநேரம் ஆராய்ந்து பார்த்தும் எனக்குப் புத்தகம் கிடைக்கவில்லை. உள்ளிருந்து 'சரசா! சரசா!' என்று பெரியவர் கூப்பிடும் குரல் வந்தது. நான் பக்கத்திலிருந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டேன். சரசா அதைப் பதிவு செய்து கொண்டாள், நான் கையெழுத்துப்போட்டு அவளை ஒருமுறை பார்த்து விட்டு, புத்தகத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். புன்னகையுடன் அவள் மறைந்தாள்.

நூல் நிலையத்திற்கு—சரசாவின் வீட்டிற்கு நான் அதிகமாகச் செல்ல ஆரம்பித்தேன். ஒவ்வொருநாளும் விதவிதமான ஆடையணிகளுடன் அவள் காட்சி தந்தாள். ஒரு நாள் இரட்டைச் சடைப் பின்னல் இருந்தால், மறுநாள் கூந்தல் அள்ளிச் செருகப்பட்டு, அதில் மலர்கள் தவழும். அடுத்தநாள் வளையச் சுத்தப் பட்டிருக்கும். பின் அஜந்தா ஓவியத்திலிருக்கும் கொண்டை போடப்பட்டிருக்கும். பிறகு சுற்றப்பட்ட வளையத்தின் மத்தியில் நீர் வீழ்ச்சியைப் போலக் கூந்தல் விழும், மறுபடியும் நீண்ட ஒற்றைப் பின்னல் தோன்றும். இவ்வளவும் அவளுடைய அழகுக்கு ஒத்து வந்தது.

புத்தகங்களைப்பற்றி, பத்திரிகைச் செய்திகளைப்பற்றி வெய்யிலைப்பற்றி, நாங்கள்பேசி வந்தோமே தவிர எங்களைப் பற்றி நாங்கள் பேசிக்கொண்டது கிடையாது. ஒருநாள், மனோதத்துவப் புத்தகம் ஒன்றை நான் எடுத்தேன். அதுவரை மற்றப் புத்தகங்களைப் படித்துவந்தேன், மற்றெல்லா புத்தகங்களும் தீர்ந்து போக, மனோதத்துவம், வேதாந்தம், சித்தர் பாடல் இவைகள்தாம் பாக்கி இருந்தன. மனோதத்துவத்தைப்பற்றி வந்ததும், கனவைப் பற்றி பேச்சு வந்தது.

நான் ஒரு கனவைப்பற்றி சொல்ல ஆரம்பித்தேன்.

நேற்று ஒரு கனவு கண்டேன். அதில் ஒருவன் மலைமேலே நடந்து போய்க் கொண்டிருக்கிறான். நடந்து போகப் போக, கடைசியாக மலையுச்சியே வந்து விடுகிறது. அப்பொழுதும் நிற்கவில்லை, மேலும் நடக்கிறான், மலை யுச்சியிலிருந்து மேகமண்டலத்திற்குள் நடந்து போக ஆரம்பிக்கிறான். ஒரு மேகத்தில் அவன் அடியெடுத்து வைத்தபொழுது அந்தமேகம் காற்றில் அடித்துக்கொண்டு போகிறது. அவன் அந்த மேகத்தில் நின்றபடி போகிறான். அந்தச் சமயத்தில் எதிர்ப்பக்கத்தில் ஒரு மேகக் கூட்டம் வருகிறது. அதன் மத்தியில் ஒரு மேகத்தில் ஒரு அரசகுமாரி உட்கார்ந்திருக்கிறாள். அவளைப்பார்த்ததும்......'

நான் தயங்கிக்கொண்டு சரசாவைப் பார்த்தேன். கதை கேட்பதுபோல அவள் உட்கார்ந்திருந்தாள்.

"உம், அப்புறம்!"

'அரசகுமாரியைப் பார்த்ததும், அவனுக்குக் காதல் உண்டானது."

சரசா சிரித்துக்கொண்டு வேறு பக்கம் பார்த்தாள்.

நான் கனவுக்கதையை மேலே தொடங்கினேன், 'அரசகுமாரி இவனைக்கண்டதும் மேகத்தினுள் ஒளிந்து கொள்கிறாள். இவனும் தானிருந்த மேகத்திற்குள் ஒளிந்து கொண்டு, மெதுவாக எட்டிப் பார்க்கிறான். அதே சமயத்தில் அவளும் மெதுவாக எட்டிப்பார்க்கிறாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துவிடுகிறார்கள். சிரித்துக்கொண்டு, வெளியே வருகிறார்கள். இவன் அரசகுமாரியிடம் பேசுகிறான், அவள் வந்து...'

அத்துடன் நிறுத்தினேன்.

'அப்புறம்' என்று சரசா கேட்டாள்.

'அப்புறம் வந்து...! எனக்குக் கற்பனை ஓடவில்லை. 'அப்புறம் வந்து கனவு முடிவதற்குள் நான் விழித்துக்கொண்டேன்.'

சரசா சிரித்துக்கொண்டாள். மறு நாள் நான் வந்தபொழுது 'மேற்கொண்டு கனவு என்னவாயிற்று?" என்று சரசா கேட்டாள்.

'நேற்று சொன்ன அளவுடன் தான நிற்கிறது,'

'மறுபடியும் கனவு காணவில்லையா?'

'கனவு வரவில்லை!'

'காணவேண்டுமென்று நினைத்தால், வராமற் போய் விடுமா??'

'என்னால் அந்தக் கனவைப் பூர்த்தி செய்யமுடியவில்லை. அந்த அரசகுமாரிதான் பூர்த்தி செய்யவேண்டும்'

சரசா பேசாமலிருந்தாள்.

'உங்களுக்கு கனவு வருகிறதில்லையா?' என்றேன்.

'கனவு வரும்!'

'இதேமாதிரிக் கனவு?'

'இதே மாதிரிக் கனவுதான்! ஆனால் சிறு மாறுதல்களுடன். அரசகுமாரி பார்த்தபொழுது அரசகுமாரன் எதிரில் நின்றான்!

'யார் அந்த அரசகுமாரன்?'

'உங்கள் கனவில் வந்தவன் தான்!

'அரசகுமாரி அவனுக்கு என்ன சொன்னாள்? அரசகுமாரன் மண்டியிட்டுக்கேட்டபொழுது, அவள் காதலிப்பதாகச் சொன்னாளா?'

அதற்குள் சரசாவின் தாத்தா இருமிக்கொண்டு வந்தார் சரசா புத்தகங்களை ஒழுங்காக அடுக்குவதில் ஈடுபட்டிருந்தாள். நான் பத்திரிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பெரியவர் இப்பொழுதுள்ள பள்ளிக்கூட முறைக்கும், முன்பிருந்த குருகுலவாசத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பேசிக் கொண்டிருந்தார்.

நாட்கள் கடந்து போவதுபோல இருந்தது. சரசா புதிராக இருந்தாள். நான் வருவதை எதிர்பார்த்து, தன்னை அலங்காரஞ் செய்துகொண்டு அவள் காத்திருப்பாள். நான் எதைச் சொன்னாலும், அவள் புன்னகையுடன் கேட்டாள். அந்தப் புன்னகையில் ஒரு குதூகலம் இருந்தது. அவள் என்னை ஒதுக்கித் தள்ளவில்லை என்பது தெரிந்தது. நான் சற்றுத் தைரியமடைந்தேன். இரவு உட்கார்ந்து ஒரு காதற் கடிதம்! என் இருதயத்தை அதில் அப்படியேக் கொட்டியிருந்தேன். நான் இலக்கியங்களில் படித்த காதல் மொழிகள் அதில் கிடந்தன, அவளை என் இருதயத்தில் அரசாளும் அரசிளங்குமாரி என வர்ணித்தேன். உண்மையில் என் காதலை ஏற்று அவள் என்ன கட்டளையிட்டிருந்தாலும் அதை நான் செய்து முடித்திருப்பேன்.

நான் எழுதிய கடிதத்தை ஒரு புத்தகத்துக்குள் வைத்து சரசாவிடம் கொடுத்தேன்.

'இந்தப் புத்தகத்தைப் படித்திருக்கிறேன்.' என்று அவள் புத்தகத்தைக் கீழே வைத்தாள்.

'மறுபடியும் படித்தால், புதிதாக ஒன்று இருப்பதைப் பார்ப்பாய்"

வழக்கம்போல் சிரித்துக் கொண்டு, புத்தகத்தை எடுத்துக்கொண்டாள். நான் திரும்பிப்பார்க்காமல் வீடு வந்தேன்.

வீட்டிற்கு வந்ததும் பல சந்தேகங்கள் எழுந்தன. கடிதத்தைப் பார்க்காமல், அவள் கீழே போட்டு, அவளுடைய தாத்தா எடுத்து, பின் என் அப்பாவிடம் வந்து......நான் இன்னும் வெளிப்படையாக 'உள்ளே ஒரு கடிதம் இருக்கிறது' என்று சொல்லியிருக்கலாம். ஒருவேளை அவளே படித்துப் பார்த்துவிட்டு அவள் தாத்தாவிடம் கொடுத்துவிட்டால் என்ன செய்வது. அவள் அவ்வாறு செய்யமாட்டாள் என்ற நம்பிக்கை இருந்தது, ஒருநாள் பூராவும் நெருப்பில் நடப்பதுபோல் நடமாடி வந்தேன்.

வழக்கத்திற்கு முன்னதாக காலை ஏழுமணிக்கெல்லாம் சரசாவின் வீட்டுக்குச் சென்றேன்.

'நேற்று வந்தீர்களா?' என்று சரசா வரவேற்றாள்.

கோபமோ, மறுப்போ, எதுவும் அவள் முகத்தில் இல்லை.

'நான் நேற்று வந்தேன். யாரும் இல்லை. அதிருக்கட்டும் நான் கொடுத்த புத்தகத்தைப் படித்தாயா?' அவள் காதருகில் மெதுவாகக் கேட்டேன். அவளுடைய தலைமயிர் என் முகத்தருகில் இருந்தது.

'நான் என்ன சொல்ல முடியும்?'

நான் கலக்கத்துடன் பின் வாங்கினேன். என்னை கேலியாகப் பார்த்து, ஒரு புன்சிரிப்பை வீசி 'என்னைக் கேட்டால், அரசகுமாரியைக் கேட்டால் பதில் கிடைக்கும்' என்றாள்.

'அரசகுமாரி என்ன சொல்கிறாள்? உண்டா, இல்லையா'?

'இல்லையென்று அவள் சொல்லவில்லை.'

என் மனம் ஆனந்தத்தில் துள்ளியது. 'அப்படியானால் ஆமாம்'

சரசா தலையசைத்தாள்.

இருமல் சத்தம் வந்தது.

'இன்றுமாலை ஐந்துமணிக்கு, பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருக்கும் தென்னந்தோப்பு' என்று சொல்லிவிட்டு வெளியேறினேன்.

மாலை காரில் நான் சென்றபொழுது, குறிப்பிட்ட இடத்தில் சரசா நின்றுகொண்டிருந்தாள். அவளை உட்காரச் சொல்லி வேகமாகக் காரை விட்டுச் சென்றேன். ஊரைக் கடந்து போகும்வரை, அவள் உள்ளே மறைவாகப் படுத்திருந்தாள். வெளியே வந்ததும், என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

கடிதங்கள் அதிகமாக எழுதிக்கொண்டோம். மாலை நேரத்தில் கார் எனக்குக் கிடைத்தால் உலாவச் செல்வோம். அப்பா வெளியூர் போய்விட்டால், நான் சரசா வீட்டிலிருக்கும் நூல்நிலையத்தில் 'படிக்க' உட்கார்ந்து விடுவேன். சரசா எதிரில் ஒரு புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டிருப்பபாள். புத்தகத்தைப் பார்த்தபடி, இருவரும் பேசிக் கொள்வோம். பார்க்கிறவர்கள் ஏதோ புத்தகம் படிக்கிறோம் என்று நினைத்துக்கொள்வார்கள். நாங்கள் பேசிக்கொள்வதைவிட மற்றவர்களை ஏமாற்றிவிட்டுப் பேசுகிறோம் என்பதில் தனித்திருப்தி இருந்தது.

சரசா மிகக் குறும்புத்தனமுடையவள். எங்கள் வீட்டுக்கு நேராக ஒருநாள் வந்துவிட்டாள். நான் மாடியில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தேன். படிப்பதாகப் பாவனை செய்து புத்தகங்களை எடுத்துவரப்போய் சில சமயங்களில் படிக்கவும் செய்தேன். சரசா பூனைபோல மெதுவாகப் பின்வந்து, என் கண்களைப் பொத்தினாள். நான் திடுக்கிட்டேன். விரல்கள் வளையல்கள் பட்டதும் யாரென்பது எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் அவள் எப்படி வீட்டுக்கு வந்தாள் என்பதுதான்?

'சரசா!' என்று கையை எடுத்தேன். 'எப்படி வந்தாய்?'

'நடந்துதான்!' சரசா சிரித்துக்கொண்டு நின்றாள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று பார்க்கத் தோன்றியது. உடனே நீங்கள் வைத்திருக்கிற இரண்டு புத்தகங்கள் வேண்டுமென்று தாத்தாவிடம் சொல்லி, அவருடைய கையெழுத்தைப் போடச்செய்து, கொண்டுவந்தேன். கீழே உங்கள் அம்மாமட்டும் இருந்தார்கள். நூல் நிலையம், புத்தகம், இப்படிக் கேட்டேன். அவர்கள் ஒன்றும் புரியாமல், மாடிக்கு அனுப்பினார்கள்: புத்தகங்களைத் தருகிறீர்களா? என்ன?'

சரசா அப்பொழுது ஒரு தெய்வமாக ஒளிவீசும் நட்சத்திரமாக எனக்கு இருந்தாள். என்னுடைய வருங்காலத்தை அவளுடைய காதல்மீது காட்டியிருந்தேன். நாங்கள் வாங்கப்போகும் கார், கட்டப்போகும் பங்களா, போகப்போகும் உல்லாசப் பயணங்கள் -இவற்றைப்பற்றி இருவரும் மணிக்கணக்கில் பேசுவோம். சரசா எப்பொழுதும் உல்லாசத்தில் விருப்பமுள்ளவள். அவள் போடுகிற திட்டங்களெல்லாம் பெரிதாக இருக்கும். காதல் போடுகிற எதிர்காலத் திட்டம் பெரிதாகத்தானே இருக்கும். அவள் பேசும்பொழுது, நான் கண்ணை மூடிக் கேட்டபடி இருப்பேன். அந்த நாட்கள்தாம் என் வாழ்க்கையிலேயே இன்பகரமான நாட்கள்!

ஒரு நாள் அம்மாவுக்கு உடல் நலமில்லாமலிருந்தது. நாங்கள் முதலில் அசட்டையாயிருந்தோம். நடுப் பகலுக்கு மேல் மயக்கமிருப்பதாக அம்மா சொன்னதும், நான் போய் டாக்டரை அழைத்து வந்தேன். உடனடியாக மருந்து கொடுத்து, மேற்கொண்டு இருதயக் கோளாறு இருப்பதால், அதற்குத் தகுந்த சிகிச்சை எடுத்துக்கொள்ள சென்னைக்குப் போகும்படி டாக்டர் சொன்னார்.

இரண்டு நாள் கழித்து, அம்மாவை அழைத்துக்கொண்டு என்னை முன்னதாகப் போகும்படி சொன்னார். இரயிலுக்கு இரண்டு மணி நேரந்தான் அவகாசமிருந்தது, அவசரம் அவசரமாக பெட்டிகளைத் தயார் செய்து, சரசா வீட்டுக்குச் சென்றேன். அவளையும், அவளுடைய தாத்தாவையும் காணோம். இரண்டு பேரும் வெளியில் சென்றிருப்பதாகச் சொன்னார்கள் சென்னை சென்று சீக்கிரத்தில் திரும்பி வந்து விடுவதாக, அவர்களிடம் சொல்லுமாறு, வேலைக்காரனிடம் சொல்லிவிட்டு நான் சென்னைக்குப் புறப்பட்டேன். அப்பொழுது ஒருவாரத்தில் திரும்பலாமென நினைத்தேன்.

சென்னையில் ஒருவாரமல்ல, ஆறு மாதங்கள் தங்கவேண்டி நேரிட்டது. அம்மாவுக்குச் சிகிச்சை மிக மெதுவாக நடைபெற்றது. இதற்கிடையில் சென்னைக்கு வருவதற்காக அப்பா இரண்டு மாதம் விடுமுறை எடுத்தார். அத்துடன் விடுமுறை முடிந்ததும், வேறொரு மாவட்டத்திற்கு அப்பா மாற்றப்பட்டார். நானும் அம்மாவும் மாமாவீட்டில் தங்கியிருந்தோம். திரும்பவும் சரசாவைப் பார்க்க ஊருக்குப் போகவேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்தேன். தனியாக இருக்கும்பொழுது, சரசா முன்பு எழுதிய கடிதங்களை எடுத்து வைத்துப் படிப்பேன். எவ்வளவு காதல்! எவ்வளவு மகிழ்ச்சி! சில சமயங்களில் சரசாவுக்குச் சென்னையிலிருந்தபடி கடிதம் எழுதலாமா என்று யோசிப்பேன். ஆனால் தபால் கடிதம் அவளுடைய தாத்தா கையில் கிடைத்தால் ஆபத்து! பொறுத்துக் கொண்டிருந்தேன், இவ்வளவு நீண்ட காலம் கடிதம் போடாமலிருப்பதற்கு சரசா கோபித்துக் கொள்வாள் நேரில் போய் மன்னிப்புக் கேட்கவேண்டும். கடைசியாகச் சென்னையில் தங்கியிருப்பது பிடிக்காமல், முன்பு நாங்கள் இருந்த ஊருக்குத் திரும்பினேன்.

சரசா அங்கில்லை. சென்னைக்கு அவளுடைய அத்தை வீட்டுக்குப் போயிருப்பதாகப் பெரியவர் சொன்னார். அத்தையின் கணவர் யார், எங்கிருக்கிறார் என்று விசாரிப்பதுபோல, சரசாவின் சென்னை விலாசத்தைப் பெற்றுக்கொண்டேன். அந்த வீட்டுக்கு இருந்த போன் நம்பரையும் கிழவர் கொடுத்தார். சரசா சென்னைக்குப் போய் இரண்டு மாதங்களுக்கு மேலிருக்கும் என்று அவர் சொன்னார்.

இரண்டு மாதங்களாக சரசா சென்னையில் இருந்திருக்கிறாள். எனக்குத் தெரியவில்லை. எவ்வளவுநாட்கள் வீணாகிவிட்டன. கடற்கரை, பூந்தோட்டம், நாடகம், இவைகளெல்லாம் வீணாகப் போயின. சென்னையில் சரசா எவ்வளவோ மகிழ்ச்சியுடனிருந்திருப்பாள்.

சென்னைக்குவந்ததும், முதல் வேலையாக சரசாவின்வீட்டுக்கு போன் செய்தேன். மணியடித்தது. போன் எடுக்கப்பட்டது. நம்பரைக் கேட்டேன்.

'ஆமாம், யாரது?'

சரசாவின் குரல். கரமுரவென்று டெலிபோனின் இடைச் சத்தம் இருந்தாலும் அவளுடைய குரலைக் கண்டுபிடிக்க முடிந்தது. ஆயிரம் பேர்கள் கூச்சலிட்டாலும், சரசாவின் குரலை என்னால் கண்டுபிடித்துவிட முடியும். அவளுடைய குரலை என் காது கேட்காது, இதயம் கேட்கும்!

'சரசா, சரசா!' என்று ஆவலுடன் கூவினேன்.

'யார் பேசுகிறது?' என்று மீண்டும் கேட்டாள்.

'டார்லிங், பேசுவது யாரென்று தெரியவில்லையா?' நான் பெயரைச் சொல்லவில்லை.

'ஓ! இப்பொழுது வேலை அதிகமாக இருக்கிறது, மாலை ஐந்து மணிக்கு, லேடிஸ் கார்டனில் சந்திக்கிறேன்!'

நான் மெய்மறந்து உட்கார்ந்தேன்.

சரசா! சற்றுமுன் அவளுடன்தான் பேசினேன். எவ்வளவு நாட்கள் — மாதங்கள் — யுகங்கள் கழித்து அந்த இனிய குரலைக் கேட்கிறேன். பேசும்பொழுது, அவள் எப்படியிருந்திருப்பாள் என்பது எனக்குத் தெரியும். நெளிவு, குழைவு, சிரிப்பு, குறும்பு எல்லாம் ஒன்று சேர்ந்தால்தான் அவளிடமிருந்து ஒரு சொல் வரும். தோற்றத்தில் மட்டுமல்ல, அவள் பேசுவதில், சிரிப்பதில் பார்ப்பதில், நடப்பதில், அவளுடைய ஒவ்வொரு செயலிலும் அழகு இருந்தது. ஆடுகின்ற மலர், பாடுகின்ற வானம்பாடி, மின்னுகின்ற நட்சத்திரம், மேகங்களிடை தவழ்ந்துவரும் முழுநிலவு, இவைகளில் ஒவ்வொரு அழகும் அவளிடம் இருந்தன. அவளைப்பற்றி நினைத்தவண்ணம் அன்று நடமாடினேன்.

பிற்பகல் இரண்டு மணிக்கே வீட்டைவிட்டுப் புறப்பட்டேன். ஆறு மாதங்கள் கழித்து காதலியை என் காதலைச் சந்திக்கிறேன் என்றால் எவ்வளவு பரபரப்பு, உற்சாகம் இருந்திருக்கும்.

அவள் குறிப்பிட்ட தோட்டத்தில் போய் உட்கார்ந்தேன். சுற்றிலும் செடிகள், கொடிகள், மரங்கள் எல்லாம் புதுமையாக, இதற்குமுன் பார்த்தறியாத

வைகளைப்போல இருந்தன. உலகம் எவ்வளவு புதுமையான, மகிழ்ச்சிகரமான இடம்! சொர்க்கலோகம் என்பது இங்கேதான் இருக்கிறது!

மணி நாலரைஆயிற்று. இன்னும்அரைமணிநேரந்தான். ஒவ்வொரு நிமிடமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெய்யில் சாய ஆரம்பித்தது. மரங்களின் நிழல்கள் நீண்டன. பறவைகள் கூவிக்கொண்டு மேலே வந்து மரங்களில் அடைந்தன. மாலையின் பரபரப்பு தொடங்கியது.

ஐந்து மணி! அவள் இன்னும் வரவில்லை. உட்கார்ந்திருக்க முடியாமல் எழுந்து தோட்டத்திற்குள் வரும் வழியைப் பார்த்தபடி உலவிவந்தேன். யார் யாரோ வந்தார்கள். அவள் மட்டும் வரவில்லை, அவள் வராத ஒவ்வொரு நிமிடமும் ஒரு ஆண்டுபோலத் தோன்றியது. ஆறுமாதம் பேசாத நாங்கள் எவ்வளவு விஷயங்களைப் பேசியாக வேண்டும்.

கடைசியாக அவள் - சரசா தோட்டத்திற்குள் நுழைந்தாள். ஆறுமாதங்கள் பார்க்காதிருந்த எனக்கு, அவள் முன்னைவிட அதிக அழகுடன் காணப் பட்டாள். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தால், முன்னைவிட அதிக வெளிச்சத்தைக் காண்பது போலிருக்கும். சரசா சுற்றுமுற்றும் பார்த்தாள். எனக்கு ஒரு வேடிக்கை செய்யவேண்டுமென்று தோன்றியது, என்னை எவ்வளவு நேரம் காக்க வைத்தாள். இருக்கட்டும் என்று பக்கத்திலிருந்த செடியின் பின் ஒளிந்து கொண்டேன்.

சரசா தேடிக்கொண்டு வந்தாள். நான் ஒளிந்திருந்த செடியின் பக்கத்தில் நின்றுள, பின் மேற்கொண்டு நடந்தாள். திரும்பிவரும்பொழுது பிடித்துக் கொள்ளலாம் என இருந்தேன்.

"ஏன் இவ்வளவு நேரம்?"

சரசா திரும்பிப் பார்த்து நின்றாள்.

நான் கேட்கவில்லை. வேறு யாரோ? திடுக்கிட்டுப் பார்த்தேன்.

சற்று தூரத்தில் ஒரு பலகையில், மிக ஆடம்பரமாக உடையணிந்த வாலிபன் எழுந்து வந்தான்.

சரசா சிரித்தபடி நின்றாள். அவன் அருகில் வந்தான்.

'போனில் பேசினால் ஏன் அப்படிக் கோபிக்கிறாய்?' என்று அவன் கேட்டான்.

ஒன்பது மணிக்கு ஒரு தடவை பேசி விட்டு, மறுபடியும் பத்துமணிக்கு ஒரு தடவை பேச அரம்பித்தால், அத்தை யாரது என்று கேட்கிறார்கள்!

'ஒன்பது மணிக்கு நான் போன் செய்யவில்லையே!' என்று அவன் பதிலளித்தான்,

'ஏன் இந்தப் பொய்?' என்று அவள் கடைக்கண்ணால் பார்த்தாள்.

'வா, போகலாம்!' என்று அவன் அவள் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு போனான்.

வெளியில் ஒரு பெரிய கார்-அவன் கொண்டுவந்திருக்க வேண்டும்! அவனுக்குப் பக்கத்தில் அவள் உட்கார்ந்து கொண்டாள், இருவரும் சிரித்துக்கொண்டார்கள்.

கார் கிளம்பியது, சென்று விட்டது.

செடிக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு எப்படியிருந்திருக்கும்! சற்து முன், அழகாக மகிழ்ச்சிகரமாகத் தோன்றிய சோலை பயங்கரமான இடமாகத் தோன்றியது என்னால் நடக்கமுடியவில்லை. இடிந்துபோய் உட்கார்ந்தேன். எவ்வளவு நேரம் அங்கு உட்கார்ந்திருந்தேன் தெரியாது.

வானம் இருண்டது. என் கண் முன் உலகம் இருண்டது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் உதிர்ந்தன. மனதிலிருந்த ஒரு நட்சத்திரம் உதிர்ந்து விட்டது,

நட்சத்திரமென்று எதைப் போற்றிக் கொண்டாடினேனோ அது வெறும் கரித்துண்டாக விழுந்தது.

எதை அழகு தெய்வமென்று கொண்டாடினேனோ; அது பாம்பு உறைந்திடும் களிமண் உருவமாக இருந்தது.

பளிங்குச் சிலையைப் பார்த்து மகிழும்பொழுது அதன் மீது தண்ணிர் பட, சாம்பற் கட்டி கரைவது போல அது கரைந்தால் எப்படியிருக்கும்? அழகான ஓவியத்தைப் பார்க்கும் பொழுது, பின்னாலிருந்து ஒருவர் சேற்றை எடுத்து அதன் மீது வீசினால், ஓவியம் எப்படியிருக்கும்?

என் நினைவை என்னால் நம்ப முடியவில்லை. நான் கண்டது உண்மைதானா? புதிய காதலன் -அவனுடன் உல்லாசமாக அவள் போகிறாள்! உலகில் எதை நம்புவது? எதுதான் உண்மையாக இருக்கிறது?

காலையில் போனில் நான் பேசியபொழுது, அவள் என்னுடன் பேசுவதாக நினைக்கவில்லை. அவளுடைய புதுக் காதலனுடன் பேசுவதாக நினைத்திருக்கிறாள்!

வேகமாக வீட்டிற்கு வந்து, ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு, நான் வெளிக்கிளம்பினேன். 'எங்கு போகிறாய்?' என்று அம்மா. மாமா எல்லோரும் கேட்டார்கள். எங்கு போகிறேன் என்று எனக்கும் தெரியாது. மூன்று மாதங்கள் சுற்றிக்கொண்டிருந்தேன். திடீரென்று வந்து திடீரென்று போய்விடுவதைப்பற்றி எனது நண்பர்களும் சுற்றத்தார்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

காதலி இறந்ததும் உடைந்த இருதயத்துடன் நீ கிளம்பியதாகச் சொன்னாய். என்னுடைய காதலி உயிரோடிருந்தாள். ஆனால் காதல் செத்து விட்டது. உடைந்த இதயத்தை யாராவது ஒன்றுசேர்த்து வைக்கலாம். ஆனால் என் இதயம் நொறுங்கிப் போய்விட்டது.

நான் எங்கிருக்கிறேனென்று என் வீட்டிற்குத் தெரியாமற் போய்விட்டது. அப்பா தேடிக் கொண்டு வந்தார். பாதியுடம்பும் எலும்புந் தோலுமாக இருந்த என்னை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போனார். என்னைப் பார்த்ததும், அம்மா கட்டிக்கொண்டு கோவென அழுதார்கள்.

பிறகு எனக்குத் திருமணம் நடந்தது. என்னுடைய மனைவி மிக நல்லவள், குடும்பத்தைச் செம்மையாகப் பார்த்துக் கொண்டாள். நீதிப் பிரிவில் புகுந்து, படிப்படியாக நான் உயர்ந்து வந்தேன். குடும்பத்தில் குழந்தைகள் பிறந்தன. வீட்டில் அமைதியும் ஒழுங்கும் இருந்தன. வெளியுலகப் பார்வையில் நான் நன்றாக வாழ்ந்தேன். ஆனால் வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றம் என் இதயத்தைவிட்டு நீங்கவில்லை.

நன்றாக இருக்கிற வீடுகளில் ஒடிந்த தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு ஒரு அறையில் போட்டிருப்பார்கள். மற்ற இடங்கள் பளபளப்பாக, ஆடம்பரமாக இருக்கும். வருபவர்களை மற்ற இடங்களுக்கு அழைத்துப்போய் காட்டுவோம். ஆனால் உடைந்த சாமான்கள் கிடக்கும் பாழடைந்த அறை பூட்டப்பட்டு, யார் கண்ணிலும் படாமல் இருக்கும். அதைப்போல பளபளப்பான வாழ்வில், என் இருதயம் பாழடைந்த அறையைப்போல யாருக்கும் தெரியாமல் பூட்டப்பட்டு கிடக்கிறது.

சரசாவைப்பற்றி பின்னால் அடிக்கடி கேள்விப்படுவேன். 'சாராதேவி, சாராதேவி!' என்று பெரிய வட்டாரங்களில் அவள் பெயர் அடிபடும். சரசா என்பதை மாற்றி சாராதேவி என்று வைத்துக்கொண்டாள். விளையாட்டுப் பொம்மைகளை வைத்துக் குழந்தைகள் விளையாடுவதுபோல, மனிதர்களை வைத்து அவள்விளையாடினாள். கடைசியாக ஒரு பெரிய ஜமீன்தார் பையனைத் திருமணம் செய்துகொண்டாள். குதிரைப் பந்தயம், விருந்து வேடிக்கைகள் இப்படி அவள் சுற்றிக் கொண்டிருந்தாள்.

ஒருதடவை ஒரு விருந்தில் அவளைப் பார்த்தேன். அவளும் ஜமீன்தாரும் வந்தார்கள். நான் இருநூறு முந்நூறு அடிகளுக்கு அப்பால் இருந்தேன். அப்பொழுதும் அவள் பார்க்க அழகாக, வசீகரமான தோற்றத்துடன் இருந்தாள். அவ்வளவு அழகான முகத்துக்குப் பின்னால், களங்கம் குடிகொண்டிருக்கும் என்பதை அப்பொழுதுகூட என்னால் நம்ப முடியவில்லை.

கிளப்புகளில் சீட்டாடிக் கொண்டிருக்கும்பொழுது சாராதேவியைப்பற்றி கிளம்பியுள்ள வதந்திகளைப்பற்றி யாராவது பேசுவார்கள். அப்பொழுதெல்லாம் ஈட்டியால் யாரோ, ஆறி வருகிற புண்ணைக் குத்திக் கிளறுவது போலிருக்கும்.

பொன்னையா! என்னைவிட நீ எவ்வளவோ மேலானவன்! உன் இருதயத்தில் காதல் இன்றும் இருக்கிறது. நீ கொண்ட காதலைப்பற்றி இன்றும் பெருமையுடன் நினைத்துக்கொள்ளலாம். காதலி உன்னைக் காதலித்தாள். கடைசிவரைக் காதலித்தாள்! காதலி இறந்தாள். ஆனால் காதல் இருக்கிறது! அந்த சோகத்தில் ஒருவித உயர்வு, பெருந்தன்மை இருக்கிறது!

ஆனால், எனக்கு! நான் யாரைக் காதலித்தேனோ, அவள் உயிரோடிருக்கிறாள்! அவள் பெயரை மற்றவர்கள் கேலியாகச்சொல்லும் பொழுது கேட்க மனம் கூசுகிறது! முதலில் அவள் ஏற்றுக் கொள்ளாதிருந்திருந்தால், அதில்ஏற்படுகிற சோர்வு இவ்வளவுவேதனை தந்திருக்காது! எங்களுடைய காதலைப் பெற்றோர்கள் தடுத்து, சமூகம் கட்டுப்படுத்தி எங்களைப் பிரிப்பதில் அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் கூட, எனது வெறுப்பு சமூகத்தின் மீது திரும்பியிருக்கும்! மற்றவைகளின் மீது வைக்கும் நம்பிக்கையை காதலின் மீது வைப்பேன்! ஆனால் சரசாவின் போக்கு, அடிப்படையைத் தகர்த்து விட்டது. காதலில் இருந்த நம்பிக்கை சிதறி விட்டது! வாழ்வில் ஏற்படக் கூடிய மிகப்பெரிய சோகம், தோல்வியாலோ, தடையாலோ தரப்படுவதல்ல. ஒன்றில் வைத்த அசையாத நம்பிக்கைத் தகர்ந்துவிடுவது தான்!"

சந்தானம் தன் கதையை முடித்தார். டாக்டர் பொன்னையா, சிகரெட்டிலிருந்து கிளம்பி, நெளிந்து, பின் மறையும் புகையைப் பார்த்தபடி இருந்தார்.

"மணி பதினொன்னரை ஆகிறது. பன்னிரண்டு மணிக்கு ஒரு நோயாளியைப் பார்க்க வேண்டும்" என்று டாக்டர் கிளம்பினார்.

"எனக்குக் கூட நாளை ஒரு முக்கியமான வழக்கு வருகிறது. காலையில் சீக்கிரம் எழுந்து, படித்துப் பார்க்க வேண்டும்" என்று நீதிபதி விளக்கை அணைத்துப் படுக்கைக்குச் சென்றார்.

முடிவுற்றது.

இலக்கியம்

காதல் கெழுமிய நலத்தள்!

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

தலைவன் வீரத்திற் சிறந்து, பெயரும் புகழும் பெற்று, ஈடு இணையற்ற ஒருவனாய்த் திகழ்கிறான். படைவீரர்களுள் ஒருவனாய் விளங்கிவந்த தலைவனின் வீரத்தையும், தீரத்தையும், அரும்பெரும் ஆற்றலையும், அறிவு மேம்பாட்டையும் கண்ட அரசன் அவனைப் படைத்தலைவனாக்குகிறான்.

படைத்தலைவன் பொறுப் பேற்றுக்கொண்ட தலைவன் மிக்க பெருமிதத்தோடும், பூரிப்போடும் செயலாற்றி வருகிறான். அவன் ஆண்டில் இளைஞனாயினும் ஆற்றலில் வல்லவனாய்த் திகழ்கிறான் என்பது கண்டு நாட்டவரனைவரும் அவனைப் போற்றி வரவேற்கின்றனர்.

தன் இளங்காதலன் தனக்கு மட்டும் தலைவனாக ஆகாமல், நாட்டின் படைக்கே தலைவனாக ஆகிப், பெயரோடும், புகழோடும் விளங்கி, எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றுவருவது கண்டு தலைவி அகமகிழ்கிறாள். தலைவன், தன்னிடம் இடையறா அன்பு காட்டி இல்லற வாழ்வை இனிது நடத்தி வருபவனாக இருந்தபோதிலும், அவன் படைத்தலைவனானதால் போரின் காரணமாக, வெளியூருக்குத், தன்னை விட்டுவிட்டுப் போய்விடுவானோ என்ற அச்சம் அவளை அடிக்கடி குடைந்து கொண்டிருக்கும். என்றாலும் தலைவன் தற்பொழுது தன்னை விட்டுப் பிரியாமலிருந்துவருவது அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது.

திருமணம் ஆன சில ஆண்டுகளுக்குள் தலைவி ஆண் குழந்தை ஒன்றை ஈன்றெடுக்கிறாள். தலைவன்-தலைவியரின் இல்லற இன்பத்தை, அன்பின் செல்வமாகிய அக்குழந்தை, மேன்மேலும் வளர்க்கிறது. தலைவனும் தலைவியும் குழந்தையைப் பேணி வளர்த்து, அதன் மழலைமொழி கேட்டும், சிரிப்பொலி பார்த்தும், அழகு விளையாட்டுக்கள் கண்டும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கிடக்கின்றனர்.

இதற்குள் பகைநாடு ஒன்றின் மீது போர் தொடுக்க வேண்டிய நெருக்கடி நிலை அரசனுக்கு ஏற்பட்டது. உடனே அரசன், நால்வகைப் படைகளோடு போருக்குத் தயாராகும் படி படைத்தலைவனுக்குக் கட்டளை பிறப்பிக்கிறான். படைத் தலைவனும் நால்வகைப் படைகளையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு வந்து நிறுத்திப், பகை நாட்டின் மீது புறப்பட ஆயத்தமாகிறான்.

தலைவன் போருக்குப் புறப்பட்டு விட்டான், படைகளும் திரண்டு விட்டன, இனித் தன்னை விட்டுப் பிரியப் போகிறான் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் தலைவி மிகவும் மனம் கலங்கிப் போகிறாள். அந்த வேளையில் தலைவன் தலைவியிடம் விடைப்பெற்றுச் செல்வதற்காக வீடு நோக்கி வருகிறான், தலைவனைக் கண்டதும் தலைவி கோவெனக் கதறி அழத் தொடங்குகிறாள். தலைவன் அவள் அருகே சென்று, வாரி அணைத்து, உச்சிமோந்து முத்தமிட்டு, அவளது கண்ணீரைத் துடைத்து அவளுக்கு ஆறுதல் மொழி கூறுகிறான்.

“நீங்கள் போருக்குப் போகாவிட்டால் என்ன?” என்று கேட்கிறாள்.

“நான் போருக்குப் போகாவிட்டால், என்னை யார் யார் வீரன் என்று கருதிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களெல்லோரும் இந்த நொடியிலிருந்து என்னைக் கோழை என்று கருதிக் காரி உமிழ்வார்கள். அத்தகைய காட்சியைக் காண உனக்கு விருப்பமா?” என்கிறான் தலைவன்.

“அப்படியானால் என்னையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்!” என்கிறாள்.

“இல்லிலிருந்து இல்லறச் செயல்களை இனிது முடிக்க வேண்டிய, நீ என்னுடன் போருக்குப் புறப்படுவது முறையுமல்ல, வழக்கமும் அல்ல!” என்று கூறுகிறான்.

“என்னை விட்டுச் செல்வது உங்களுக்கு அழகாக இருக்கிறதா?” என்று கேட்கிறாள்.

“உன்னை விட்டுச் சென்றால், உன்னை மீண்டும் அடையலாம் என்ற உறுதிப்பாடாவது இருக்கிறது. ஆனால் நாட்டை விட்டுவிட்டு வாளா இருந்தால், நாட்டை மீண்டும் அடையவே முடியாதே!” என்கிறான்.

“நான் உங்களை விட்டு எப்படிப் பிரிந்து வாழ்வேன்?” என்கிறாள் தலைவி.

“நான் இல்லாதபோது உனக்கு ஆறுதல் அளிக்கத்தான் அதோ பார், ஒரு வீரன் இருக்கிறானே!” என்று குழந்தையைச் சுட்டிக் காட்டுகிறான் தலைவன்.

உடனே தலைவி குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு, தலைவன் ஆற்றவேண்டிய கடமையை நன்கு உணர்ந்து, அவனுக்கு விடைகொடுத்து அனுப்புகிறாள். தலைவனும் மகிழ்ச்சியோடு போருக்குப்புறப்படுகிறான்.

தலைவன் தேர்மீது ஏறி அமர, அவனது தேர் நகர்கிறது. அதனைத் தொடர்ந்து மற்ற தேர்ப்படைகளும், அவற்றை அடுத்து யானைப் படைகளும, பின் குதிரைப் படைகளும், பிறகு காலாட் படைகளும் வானளாவப் புழுதியைக் கிளப்பிவிட்டுக் கொண்டு செல்கின்றன. அரசனும் படைகளோடு போர்க்களம் புகுகிறான்.

இருநாட்டவர்க்கும் கோடைகாலம் முழுவதும் இடையறாமல் கடும் போர் நடைபெறுகின்றது. நாலாப் பக்கங்களிலும் செங்குருதி பாய்ந்தோடுகிறது. பிணமலைகள் ஆங்காங்கு குவிகின்றன. வெட்டுண்ட யானைகளும், குதிரைகளும் அலறித்துடித்து ஓடுகின்றன. வீரர்கள் மாற்றாரைத் தாக்கின்றனர், இறுதியில் நமது படைத் தலைவனின் பக்கம் வெற்றிகிட்டுகிறது. வெருண்டோடியவர்கள் போக மற்ற மாற்றாரை அடிமைப் படுத்திக் கொண்டு வெற்றி ஆரவாரம் செய்கின்றனர் படை வீரர்கள். அரசன் படைத்தலைவனுக்கும், மற்ற வீரர்களுக்கும் பரிசுகள் வழங்குகிறான். எல்லோரும் அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு நாடு திரும்புகின்றனர்.

படைத்தலைவன் தலைவியைக் காணவேண்டும் என்ற ஆவல் மிகுதியால், தேரின் மீது பாய்ந்து ஏறி உட்கார்ந்து கொண்டு, விரைவாகத் தேரைச் செலுத்தும் ப[illegible] தேர்ப்பாகனுக்குக் கட்டளை யிடுகிறான். குதிரைகள் நாலு கால் பாய்ச்சலில் தேரை இழுத்துக் கொண்டு புறப்படுகின்றன.

படைத் தலைவன் வானையும் நிலப்பரப்பையும் சுற்றி முற்றும் பார்த்து விட்டுக் கார் காலம் வந்து விட்டதை உணருகிறான், மலைகளிலுள்ள சுனைகள்தோறும் நீர் நிறைந்திருப்பதையும், அழகிய பெண்களின் கண்களைப் போல குவளைமலர்கள் மலர்ந்து காட்சியளிப்பதையும் காண்கிறான். வேங்கை மலர்கள் உதிர்ந்து மணம் கமழ்ந்து கொண்டிருப்பதையும், அவற்றை மொய்த்துக் கிடக்கும் வண்டுகள் தேரின் மணியோசை கேட்டுப் பறந்தோடுவதையும். பார்க்கிறான். சோழ நாட்டிலுள்ள ‘நெடுந் தெரு’ போன்று வழிநெடுக உள்ள அழகிய ஊர்களில் போர் வீரர்கள் தங்கித் தங்கி இளைப் பாறி, இனியன உண்டு இனியன கண்டு, இன்பம் நுகர்ந்து செல்வதையும் பார்க்கிறான். தலைவியைக் காண வேண்டும் என்ற ஆவலால் துடிதுடித்துக் கொண்டிருக்கும் படைத்தலைவன், அவர்களோடு தங்கியிருந்து மகிழ்ந்து செல்லமுடியாதவனாகி, விரைவாகத் தன் இல்லம் நோக்கித் தேரைச் செலுத்துகிறான், வழிநெடுகப் பரவிக் கிடக்கும் வெண்காந்தள் பூவின் வளவிய இதழ்கள், குதிரைகளின் கவிந்த குளம்புகள் மிதிபடுவதால் சிதறுண்டு, உடைந்த வெண்சங்கின் சிதள்கள் போல் கிடக்கின்றன. அப்படிப்பட்ட காந்தள் பூக்கள் கார்காலம் வந்து விட்டதைத் தலைவனுக்கு நினைவு படுத்திக் கொண்டிருக்கின்றன. தலைவி, தன்னைக் காணாமல் எப்படியெல்லாம் ஏங்குகிறாளோ, என்னவெல்லாம் சொல்லிச் சினந்து கொள்வாளோ என்று நினைத்த வண்ணம் தலைவன் செல்கிறான்.

தலைவி, அவ்வப்போது தன்னிடம் காட்டி வந்த அன்பின் பெருக்கையும், அவளுடைய இனிய மொழிகளையும், அழகிய முறையில் தேமல் படர்ந்த உறும்பு நலன்களையும், அவள் தன் அருமை மைந்தனுக்குப் பொய் மொழிகளால் பாராக்கு காட்டி வேடிக்கைக் காட்டிக் கொண்டிருக்கும் தன்மையையும் நினைத்து நினைத்து இறும்பூதெய்துகிறான்.

தலைவனின் தேர் இல்லத்தை நெருங்கும் போது, தலைவி தன் குழந்தையை இடுப்பில் ஒற்றிக்கொண்டு, பாராக்கு மொழிகள் உரைத்துக்கொண்டு, சிரித்த முகத்துடன் வாயிற்படியில் நின்று காட்சியளிக்கும் கோலத்தைக் கண்டு தலைவன் வியப்படைகிறான்.

தான் வரப்போவது தலைவிக்கு எப்படியோ முன் கூட்டியே தெரிந்து விட்டது

...ன்று எண்ணிப் பூரிப்படைகிறான். கார்காலம் வந்ததைக் கண்டு கொண்டாளோ அல்லது, காக்கைகள் கரைந்ததால் தெரிந்து கொண்டாளோ தெரியவில்லை இல்லாவிட்டால், அவள் மகிழ்ந்திருப்பதற்கு வேறு காரணம் எதுவும் இருக்க வழியில்லை என்று எண்ணி அக்கருத்தைத் தேர்ப்பாகனிடம் வெளியிடுகிறான். அவள் மகிழ்ச்சி கொள்வதற்கு தேர்ப்பாகன் விரைந்து தேரை ஓட்டி வந்ததே காரணம் என்பது தலைவனின் கருத்து.

தேரை விட்டு இறங்கி விரைந்து ஓடிவருகிற தலைவனைத் தலைவி எதிர்கொண்டு ஓடிக்கட்டி அணைத்துக் கொள்கிறாள். பிறகு தலைவன் குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டு மகிழ்கிறான்.

தன் வருகையைப் பற்றி ஏவலாளர்கள் வந்து சொல்லுவதற்கு முன்னரே தேரைச் செலுத்திக் கொண்டு வந்த பாகனின் திறனைப் போற்றி அவனை மகிழ்விக்கிறான்.

தலைவன் தலைவியாது இல்லற வாழ்வு மீண்டும் இனிய முறையில் தொடங்குகிறது!

இது நற்றிணை—161 ஆம் செய்யுளின் கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இது முல்லைத் திணையைச் சேர்ந்த வினைமுற்றுப் பெற்ற தலைவன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது என்னும் பிரிவினைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவரின் பெயர் தெரியவில்லை.

இறையும் அருந்தொழில்
முடித்தெனப் பொறைய
கண்போல் நீலம் சுனை
தோறும் மலர
வீதா வேங்கைய
வியனெடும் புறவின்
இம்மென் பறவை ஈண்டு
கிளை இரிய
நெடுந்தெரு அன்ன
நேர்கோள் நெடுவழி
இளையர் ஏகுவனர்
பரிப்ப வளையெனக்
காந்தள் வள்ளிதழ்
கவிகுளம்பு அறுப்பத்
தோள்வலி யாப்ப
ஈண்டு நம் வரவினைப்
புள்ளறி வுறீஇயின
கொல்லோ தெள்ளிதில்
காதல் கெழுமிய
நலத்தள் ஏதில்
புதல்வற் காட்டிப் பொய்க்குந்
திதலை யல்குல்
தேமொழி யாட்கே.

(நற்றிணை-161)

[பொழிப்புரை: நம்முடைய அரசனும் செய்தற்கரிய போர்த்தொழிலை முற்றுவித்ததனாலே, மலையிலுள்ள சுனைகள் தோறும் பெண்களின் கண் போன்ற குவளை மலர்ந்து காணப்பட, மலருதிர்ந்து பரவுகின்ற வேங்கை மரங்களையுடைய அகன்ற நெடிய காட்டின் கண்ணே இம்மென ஒலிக்கின்ற வண்டுகளின் நெருக்கிய கூட்டம் சிதறி ஓட, சோழநாட்டின் கணுள்ள 'நெடுந்தெரு' என்னும் ஊர்போன்ற அழகு பொருந்திய நெடியவழியிலே நம்முடைய வீரர் ஆங்காங்குத் தங்கித்தங்கிச் செல்ல, வெண் காந்தளின் வளவிய இதழ்கள் சங்கு உடைந்து கிடந்தாற் போலக் கிடக்கு மாறு குதிரையின் கவிந்த குளம்பு மிதித்து அறுக்க, தோள்களிலே வலி பிணித்து நின்றாற் போல, மிக நெருங்கி வருகின்ற நம்முடைய வருகையை, நம்பால் ஆசை மிக்க நலத்தையுடையவளாய், யாதுமில்லாத வேறொன்றைத் தன் புதல்வனுக்குக் காட்டிப் பொய்ம்மொழி கூறி ஆற்று வித்து மகிழும் தித்தி பரந்த அல்குலையும் இனிய மொழியையுமுடைய நம் காதலிக்கு நிமித்தம் காட்டும் காக்கையாகிய பறவையினங்கள் கரைந்து அறியும் படி தெரிவித்தனவோ? இங்ஙனம் மகிழ்ந்திருப்பதற்கு வேறு காரணம் இல்லையே!

இறை—அரசன்; வீ—பூ; இளையர்-ஏவலாளர்; திதலை—தேமல்.]

* * *

வினையை முடித்து விட்டு மீளும் தலைவன் - தன் அருமைக்காதலியைக் காண எவ்வளவு ஆவலோடு துடிக்கிறான் என்பதும், அதன் பொருட்டுத் தேரை விரைவாகச் செலுத்த வேண்டித் தேர் பாகனை மகிழ்விக்கத் தலைவன் எப்படி முயலுகிறான் என்பதும், தலைவனின் வருகையை நோக்கித் தலைவி எவ்வளவு மகிழ்ச்சியுடன் வரவேற்று நிற்கிறாள் என்பதும் இச்செய்யுளின் கண் மிக அழகுற எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

குவளை மலருக்குப் பெண்களின் கண்ணையும், அழகிய ஊர்களுக்கு 'நெடுந்தெரு' என்னும் ஊரையும், சிதறிக் கிடக்கும் வெண் காந்தளின் வளவிய இதழ்களுக்கு உடைந்த வெண் சங்கையும் உவமையாகக் காட்டியிருப்பது வியந்து மகிழ்வதற்குரியதாகும்.

தாய் தன் மகனுக்குப் பொய்ம்மொழி கூறிப் பாராக்குக் காட்டி ஆற்றுவிப்பதாகக் கூறப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது.

காக்கைக் கரைவதை விருந்து வருகையின் அறிகுறியாகக் கற்பனை செய்து கொள்வது தொன்று தொட்டு இருந்துவரும் பழக்கம் என்பது அறியப்படுகின்றது.

தேர்ப்பாகன் விரைந்து தேரை ஓட்டி வந்ததாலேயே தலைவி மகிழ்ச்சியுறுகிறாள் என்ற கருத்தைத் தேர்ப்பாகனுக்கு மறைமுகமாகத் தலைவன் வெளியிடும் பாங்கு போற்றுவதற்குரியதாகும். ○

கைகுலுக்குதல்

வணக்கம் தெரிவிக்கும் முறை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமாக இருக்கிறது. நமது நாட்டில் சந்திக்கும் பொழுதும், பிரியும்பொழுதும் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கிறோம். வடநாட்டில் வயதில் பெரியவர்களைப் பார்க்கும் பொழுது குனிந்து காலைத் தொட்டு கண்ணில் ஒத்தி வணக்கம் தெரிவிக்கும் முறை இருக்கிறது.

எஸ்கிமோக்களும், குளிர்நாடுகளில் வசிப்பவர்கள் சிலரும் சந்திக்கும் பொழுது, அருகில் வந்து மூக்குகளை உரசிக்கொள்கிறார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்ள, உடல் முழுவதும் கம்பளிகளால் தங்களைப் போர்த்துக்கொண்டு விடுவார்கள் கனத்த உடைக்குள் கை கால்கள் மறைந்து விடும். கையைப் பிடித்துக் குலுக்குவதோ, காலைப் பிடிப்பதோ, முடியாத காரியங்கள். முகம் மட்டும் தான்மறைக்கப்படாமல் இருக்கும். ஆதலால் மூக்கை மட்டும் வணக்கம் தெரிவிக்க உபயோகிக்கிறார்கள். குளிர் நாட்டில் வாயைத் திறந்து பேசுவது மிகக் கடினமான காரியம். பேசினால், உடலிலிருக்கும் வெப்பம் கொஞ்சம் போய்விடும். எனவே சந்திக்கும் பொழுது, வாயைத்திறக்காமல், மூக்கை உரசிக்கொண்டு போவார்கள்.

அரபு நாடுகளிலும், ஆசுத்திரேலியா கண்டத்து பழங்குடிகளிடையும், தழுவிக்கொள்ளும் முறை இருக்கிறது. இரண்டு தோள் பக்கமும் மாறி மாறி இரண்டு மூன்று தடவைகள் தழுவுவார்கள். பெண்கள் கணவனைத் தவிர மற்றவர்கள் முன்னிலையில் வரக் கூடாதென்ற முறை மிகக் கடுமையாக இருந்த காரணத்தால்; பெண்கள் ஆண்களைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லாததால். இந்தப் பழக்கத்தில் வேறு தொந்தரவு ஏற்படவில்லை!

மேலை நாடுகளில் அணிந்திருக்கும் தொப்பியை தொடுவதும். எடுப்பதும் வணக்கத்தின் அறிகுறிகளாயிருக்கின்றன. மணி முடிதரித்த பேரரசர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் தங்கள் மகுடங்களைக் கழற்றிக் கீழே வைத்து வணக்கம் தெரிவிக்கும் பண்டைக் கால வழக்கத்தின் ஒருபகுதியே இந்தத் தொப்பியை எடுப்பது மரியாதையைக் காட்டும் அறிகுறியாக இருக்கிறது. கோவில்களிலும், தொழும் பொழுதும், தொப்பியைக் கழற்றிவிடும் பழக்கம் இருக்கிறது.

மேலை நாடுகளில் மிகப்பெரும்பாலும் கையாளப்படும் முறை கைகுலுக்குவதுதான். இது வரவா உலகெங்கும் பரவிவருகிறது. வேற்றுநாட்டு விருந்தினர்களும், அரசியல் தூதுவர்களும்; சந்திக்கும்பொழுது கைகுலுக்கும் முறை இருக்கிறது. தனிப்பட்ட நாடுகளிடை ஒவ்வொரு பழக்கமிருந்த போதிலும், கைகுலுக்குவதுதான் எல்லோருக்கும் பொதுவான பழக்கமாகி வருகிறது.

கைகுலுக்கும் முறை நீண்ட கால மாக இருந்து வந்திருக்கிறது. முதலில் நட்பைத் தெரிவிக்கும் முறையில் கைகுலுக்குவது ஆரம்பமானது. ஆயுதந் தாங்கி, ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளும் அந்தப் பழங்காலத்தில், ஒருவன் மற்றொருவனுக்குத் தன் நட்பைத் தெரிவிக்க "இதோ! என் கையில் ஆயுதமில்லை, உன்னை நான் எதிர்க்கமாட்டேன்! நாம் நன்பர்களாக இருக்கலாம்!" என்று ஆயுதந் தாங்கும் தனது வலது கரத்தை நீட்டிக் காண்பிப்பான். அதை யொட்டி, வருபவனும் தனது வலது கரத்தை நீட்டி, ஆயுத மெடுக்காததைக் காட்டி, கரத்தைக் குலுக்குவான் எதிர்க்கும் ஆயுதம் கையில் இல்லை, என்பதைக் காட்டுவதற்கு நீட்டப்பட்ட கரம் வர வர, ஆயுதமெடுத்துப் போராடாத காலத்திலும் நட்பின் அறிகுறியாகி விட்டது. கையைப் பிடித்தல், கைகுலுக்குவது, சந்திக்கும் பொழுது செய்யப்படுவதாயின. கையை எவ்வளவு பலமாக அழுத்திப் பிடித்து குலுக்குகிறார்களோ, அந்த அளவு சந்திப்பில் அவரது மகிழ்ச்சியைக் காட்டுவதாகக் கருதப்பட்டது.

மேல் நாடுகளில் இங்கிலாந்தில்தான் கைகுலுக்குவது குறைவாக உள்ளது. பிரான்சில் சந்திக்கும் பொழுதும் விடைபெற்றுப் போகும்பொழுதும் கைகுலுக்குவார்கள், செர்மனியில் கைகுலுக்குவது அதிகம். ஒருவருடன் கால்மணி நேரம் பேசுவதற்குள் பத்துப் பதினைந்து தடவைகளாவது கைகுலுக்கவேண்டியிருக்கும்! அமெரிக்காவில் கைகுலுக்குவது மிக முக்கியமான சடங்கு!

அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள்தான் உலகத்திலேயே அதிகமாகக் கைகுலுக்குபவர்கள். தலைவருடன் கைகுலுக்குவதையே ஒரு விழாவாக அங்கு கொண்டாடுகிறார்கள். அதிலும் சனவரி 1ந்தேதியன்று, ஆண்டின் தொடக்க நாளைக் கொண்டாட, குடியரசுத் தலைவர் மாளிகையிலிருக்கும் காவல் தளர்த்தப் பட்டிருக்கும். யார் வேண்டுமானாலும் மாளிகையினுள் போய்க் குடியரசுத் தலை

வரிக்கொடுமையும் பிரெஞ்சுப் புரட்சியும்!

ஜூலை 14 பாஸ்டிலி தினமாகக் கொண்டாடப் படுகிறது. 1789ம் ஆண்டு அந்த நாளன்று, பிரெஞ்சு நாட்டில் இருந்த பயங்கரச் சிறைச்சாலையாம் பாஸ்டிலி வீழ்ந்தது. பாஸ்டிலி வீழ்ச்சி பிரெஞ்சு புரட்சியின் வரவை அறிவிப்பதாயிற்று. அதிலிருந்து, கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக ஜூலை 14 கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த நாள், பிரெஞ்சு நாட்டு மக்களால் மட்டுமல்ல, உலகமெங்கும் மக்கள் உரிமையில் நம்பிக்கையுள்ளவர்கள் அனைவராலும் கொண்டாடப்படுகிறது. பிரெஞ்சுநாட்டு வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றில் ஒரு உன்னதமான இடத்தை அந்நாள் பெற்றுள்ளது.

பிரெஞ்சுப் புரட்சி முதல் தடவையாக மக்கள் உரிமைக்கு உள்ள வலிவை எடுத்துக்காட்டியது. அதுவரை மனிதனை மனித உள்ளத்தை கட்டுப்படுத்திய கொடுமைகளை அது தகர்த்தெறிந்தது. பாஸ்டிலி வீழ்ந்தபோது, கல்லும் மண்ணும் மட்டும் இடிந்து விழவில்லை. மக்களைச் சுற்றி மன்னன் கட்டிய தெய்வீக உரிமைகள், பிரபுக்கள் கட்டிய பரம்பரை பாத்தியதைகள், குருமார்கள் கட்டிய மூட நம்பிக்கைகள் இவை இடிந்து விழுந்தன. கொடுமையெனும் கோட்டையில் காக்கப்பட்டு, பயமெனும் சிறையில் அடைபட்டுக் கிடந்த மனிதன், அந்தச் சிறையை உடைத்து வெளிவந்தான்.

கொடுமையை எதிர்த்துப் போராட முடியும் என்ற நம்பிக்கையைப் பிரெஞ்சுப் புரட்சி உலகுக்கு அளித்தது. அந்த நம்பிக்கை மனித வரலாற்றில் புதிய அத்தியாயத்தை—புதிய வேகத்தை உண்டாக்கியது. ஆணவக்காரர்களின் கொடுமைகளுக்கு மக்கள் ஆளான நேரத்திலெல்லாம் பிரெஞ்சுப் புரட்சி அவர்களின் கவனத்திற்கு வந்தது. "இதைவிடக் கொடுமை பிரெஞ்சுநாட்டில் தாண்டவமாடியது, இதைவிட அதிகமான அடக்குமுறை அந்நாட்டு மக்களை பயமுறுத்தி வந்தது. இருந்தாலும் அவர்கள் வீறுகொண்டு எழுந்து, மன்னர்களையும் மதோன்மத்தர்களையும் முறியடிக்க வில்லையா?" என்பது, அல்லற்படும் மக்களின் கவனத்திற்கு அவ்வப்பொழுது வருகிறது. கொடுமையை எதிர்த்து நிற்கும் ஆற்றலை பிரெஞ்சுப் புரட்சி உலகுக்குத் தந்தது.

பிரெஞ்சுப் புரட்சி தோன்றியதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்தது, அந்த நாட்டு மக்களின் மீது போடப்பட்டிருந்த வரிச்சுமை! வரிக்கொடுமை ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டே போனது. போடப்பட்ட வரிகளில் ஒரு புதுமை யென்னவென்றால், அவையெல்லாம் ஏழை மக்களின் மீது மட்டும்தான் போடப்பட்டன!

வரி செலுத்த ஏழைகள் இருந்தனர். அதை வாங்கிக் குவித்து உல்லாச வாழ்வு நடத்த மன்னனும் பிரபுக்களும் மதக்குருமார்களும் இருந்தனர். வரி செலுத்திவிட்டு வாழ வேறு வகையின்றி ஏழை துடிதுடித்தான், பிரபுக்களும் மன்னனும் கோலாகலமாக வாழ்ந்தனர். வரி செலுத்துவது என்ற கேவலம் பிரபுக்களுக்கும் குருமார்களுக்கும் கிடையாது. அவர்கள் வரியை "வாங்கப்" பாத்தியதை கொண்டாடினார்களே தவிர, வரி செலுத்த என்றும் கட்டாயப்படுத்தப் படவில்லை. புரட்சிக்கு முன்பு பிரெஞ்சுநாடு இருந்த நிலைமையைப்பற்றி அப்பொழுது ஒருவர் கூறினார். "பிரபுக்கள் நடனம் ஆடுகிறார்கள், குருமார்கள் பக்திப்பாடல்களைப் பாடுகிறார்கள், ஏழைகள் வரிசெலுத்துகிறார்கள்" (The rich play, the priest play, the poor pay) பிரபுக்களின் உல்லாசத்திற்கும், குருமார்களின் ஆடம்பரத்துக்கும் ஏழைகள் செலுத்திய வரிப்பணம்தான் செலவிடப் பட்டது. ஏழை செலுத்தியவரிப்பணம், அரண்மனையில் வேடிக்கையாக, விருந்தாக, ஆடலாகப் பாடலாக, பட்டுப் பீதாம்பரங்களாக பளிங்கு மண்டபங்களாக, மணியாக அணியாக, மதுவாக மங்கையாக, மாறிப்போனது!

அரண்மனையில் செலவு அதிகமானது, பிரபுக்களின் உல்லாசம் அதிகரித்தது, அந்த அளவுக்கு மக்களிடமிருந்து வாங்கவேண்டிய வரிப்பணமும் அதிகமாகிக்கொண்டேபோனது. போடப்பட்ட வரிகளிலிருந்து, ஏழைகள் எவரும் தப்பித்துக்கொண்டு போக முடியாது. புரட்சிக்கு முன்னதாகப் பிரெஞ்சு நாட்டில் 2½ லட்சம் வரிவசூலிக்கும் அதிகாரிகள் இருந்தார்களாம். அப்பொழுது பிரெஞ்சு நாட்டு மக்கள் தொகை 2½ கோடி. ஆக நூறு பேருக்கு ஒருவராக, இந்த இரண்டரை லட்சம் வரி வசூலிப்பவர் நாட்டில் சுற்றிவந்தார்கள். அவர்களுக்குத் தரப்பட்டிருந்த அதிகாரங்களோ மிக அதிகமானவை! வரியை வசூலிக்கப் போர் வீரர்களை அவர்கள் அழைத்துச் செல்லலாம், துப்பாக்கி முனையை நீட்டி வரியை வசூலிக்கலாம். அந்த அதிகாரி நினைத்தால், வரிசெலுத்தாதவனை—செலுத்தமுடியாதவனை சிறைக்குள் தள்ளலாம், தூக்குக் கயிற்றில் தொங்க விடலாம், சிரச்சேதம் செய்யலாம். வரிவசூலிப்பவர்கள் வந்து, செலுத்தாதவர்கள் வீட்டுக் கதவுகளைப் பெயர்த்து ஏலம் போடுவார்கள். துணி மணிகளை எடுத்துச் செல்வார்கள், கூரையைப் பிரித்து எரிவார்கள்! வீட்டை இடிப்பார்கள், குடிசையைக் கொளுத்துவார்கள்! அவர்கள் என்ன செய்தாலும் யாரும் தடைசெய்ய முடியாது. புரபுக்களுக்கும் மன்னருக்கும் வேண்டியது வரி. ஏழை பாழைகள் கூச்சல் போடுவதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. என்ன செய்வார்கள்? வரி வசூலிப்பவன் வந்துவிட்டால், காலில் விழுந்து கெஞ்சுவார்கள். எட்டி உதைக்கப்பட்டு கலங்குவார்கள், தட்டு முட்டுச் சாமான்களை விற்று வரியைச் செலுத்துவார்கள். படுக்கையை விற்று, வரியைச் செலுத்தி, பின் தரையில் படுத்துக்கொள்வார்களாம். சிலர் சாப்பிடும் தட்டையும் அடுப்பில் வைக்கப்படும் பாத்திரத்தையும் விற்று வரியைச் செலுத்துவார்களாம். வரியைச் செலுத்தி முடிந்த பின், சாப்பிடும் தட்டு இருந்தால் கூட உண்மையில், அவனுக்குச் சாப்பிட வழியிருக்காது. வரி அதிகமாக அதிகமாக ஏழைகள் ஒருபுறம் அதிக ஏழைகளானார்கள், அதையடுத்து உணவுப் பொருள்களின் உற்பத்தி குறைந்து, அதன் விலையும் அதிகமானது. ஏழைகளால் கோதுமை வாங்கக்கூடக் கையில் பணம் இருப்பதில்லை. பசி தாளாமல், பாதையோரத்தில் படர்ந்து கிடக்கும் புல்லைப் பறித்துச் சிலர் சாப்பிடுவார்களாம்; சிலர் அதைச் சாப்பிட முடியாமல் மாண்டு போவார்களாம். வரிக்கொடுமை பிரஞ்சு நாட்டுக் குடியானவர்களை துரத்தியடித்ததாம். வரியைச் செலுத்த முடியாமல், வீட்டை விட்டு, குடும்பத்துடன் பிச்சையெடுக்க வெளிக்கிளம்பி விடுவார்கள். வீடுகள் இடிந்து விழுந்தன, நிலங்கள் தரிசுகளாகக் கிடந்தன, நகரங்களைச் சுற்றிக் குடும்பம் குடும்பமாகப் பிச்சைக்காரர்கள் காணப்பட்டார்கள்.

மக்களைக் கடைசி அளவுவரைக் கசக்கிப் பிழிவதாக அரசாங்க வரிகள் இருந்தன. ஏதாவது ஒரு தொழிலுக்கோ, உற்பத்திக்கோ, வரி போடப் போகிறார்களென்றால் மக்கள் அந்தத்தொழிலை உடனே விட்டு விடுவார்களாம். வரியைக் கொடுத்தபிறகு மிச்சம் எதுவும் இருக்காது. திராட்சைக் கொடிகள் பயிராகும் நிலங்கள்மீது பிரெஞ்சு அரசாங்கம் ஒரு வரியைப் போட்டதாம். உடனே குடியானவர்கள் திராட்சைப் பயிர் செய்வதையே விட்டுவிட்டார்களாம். வரி என்றால் அந்த அளவு கடுமையாக இருக்குமாம். உதாரணமாக, ஒரு பவுண்டு உப்பு அடக்கவிலை 3½ பிராங்கு இருந்ததாம். பிரெஞ்சு அரசாங்கமும் பிரபுக்களும் அதற்குப்போட்ட வரிகளுக்குப்பின், அதே உப்பு 62 பிராங்குகளுக்கு விற்க வேண்டியிருந்ததாம். உப்பின் விலையைப்போல, இருபது மடங்கு அதிகமான வரி வசூலிக்கப் பட்டதாம். அவ்வளவு அதிக வரி கொடுத்து ஏழை மக்களால் உப்பை வாங்க முடியவில்லை. அரசாங்கம் அப்பொழுதும் விடுவதாயில்லை. அரசாங்கம் ஒவ்வொரு இடத்திலும் ஒரு உப்புக் கடையை உண்டாக்கி, கிராமத்திலிருப்பவர்கள் தலைக்கு குறைந்தது ஏழுபவுண்டு உப்பு ஆண்டு ஒன்றுக்குவாங்கியாகவேண்டும் என்று கட்டாயப் படுத்தினார்களாம்! கட்டாய வரிகளைச் செலுத்தமுடியாமல் ஏழைகள் துடித்தார்கள்.

வரிப்பளு ஏழைகள் மீது அதிகமாகவும், பிரபுக்கள் மீது மிகக் குறைவாகவும் இருந்த காரணத்தால், வரிப்பளு அதிகரிக்கும் பொழுதெல்லாம் ஏழைகள் அதிக ஏழைகளானார்கள் — பிரபுக்கள் மேலும்

வருடன் கைகுலுக்கி வரலாம். அதனால் ஆண்டு முதல் நாளன்று, ஏராளமான அமெரிக்கர்கள் அந்த மாளிகையின் முன் குழுமிவிடுவார்கள். அவர்கள் அனைவருடனும் தலைவர் கைகுலுக்கியாகவேண்டும். அந்த விழா முடிந்ததும், சில சமயங்களில் ஒருவாரத்துக்கு குடியரசுத் தலைவர் கையைத் தூக்கமுடியாமல் ஒரு சிம்பு வைத்துக் கையைக்கட்டி, கழுத்தில் மாட்டிக் கொண்டிருப்பாராம்.

குடியரசுத் தலைவராக இருந்த ஹூவர் என்பவர்தான் அதிகமான தடவைக் கைகுலுக்கியவராம். அவரது மாளிகைப் பக்கம் வந்துவிட்டு, அவரது கையைக் குலுக்காமல் போனவர்கள் யாரும் இருக்க முடியாதாம். ஆனால் கைகுலுக்குவதில் அவருக்குப் பெரிய தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது. ஒருசமயம் அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கத்தினர் தந்த விருந்துக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். ஆயிரக்கணக்கானவர்கள் விருந்துக்கு வந்திருந்தனர், விருந்து முடிவில், குடியரசுத்தலைவருடன் கைகுலுக்குவது ஆரம்பித்தது. எல்லோரும் வரிசையாக நின்று ஒருவர் பின் ஒருவராக வந்து குடியரசுத் தலைவரின் கரத்தைக் குலுக்கிவிட்டு ஓரிரு வாழ்த்துக்களைச் சொல்லிச்சென்றார்கள். கூட்டத்தில் இருந்தவர்களில் பாதியளவுதான் கைகுலுக்கியிருப்பார்கள். அதற்குள் குடியரசுத்தலைவருக்கு கை வலியெடுத்தது. மெதுவாகக் கையைத்தூக்கி வெளிச்சத்தில் பார்த்தார், கையில் இரத்தம் கசிந்து கொண்டிருந்ததாம்!

பெரிய சடங்குமுறையாகி விட்டால், கைகுலுக்குவது கடும் சோதனையாகிவிடலாம் ○

செல்வத்தில் உயர்ந்தார்கள். ஏழையின் வேதனை அதிகமானது; மாளிகைகளில்வேடிக்கை அதிகமானது! பிச்சைக்காரர்களின் கூக்குரல்கேட்டது, பிரபுக்களின் ஆடல்பாடல் அதிகரித்தது! பசியால் மக்கள் துவண்டு விழுந்தார்கள், மன்னனின் விருந்துக் கூடத்தில் தேனும் பாலும் திராட்சை ரசமும் வழிந்தோடியது! கிராமங்களில் வீடுகள் இடிந்து கொண்டிருந்தன, குடிசைகள் கலைந்துகொண்டிருந்தன, வார்செய்யிலில் அரசி புதிய பளிங்கு மண்டபங்களை ஏராளமான பொருட்செலவில் கட்டிக் கொண்டிருந்தாள்! பசியால் துடித்தோர் நடக்கமுடியாமல் பாதையில் மயக்கம் போட்டு விழுந்தார்கள்; அவர்களின்மீது ஏறிச்செல்லும் அழகான கோச்சு வண்டிகளையும் அதில் அமர்ந்திருக்கும் ஆடம்பரப் பிரபுக்களையும் ஏழைகள் பார்த்தார்கள்!

வரி செலுத்தியவர்கள் வதைபட்டார்கள். வரியைச் செலுத்தாதவர்கள் உல்லாசமாக வாழ்கிருர்கள்!

இது ஏன்? என்ற கேள்வி பிரெஞ்சு நாட்டு மக்களுக்கு ஏற்பட்டது.

"வரியை நாம் செலுத்துகிரேம். அவர்கள் வாழ்கிருர்கள். எல்லாப் பலனும், வசதிகளும் அவர்களுக்கேப் போகிறது. இதுஏன்?" என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

ஒரு நாட்டு மக்கள் எப்பொழுது வரியைப் பற்றி ஆராய ஆரம்பித்தார்களோ, "நாம் செலுத்துகிற வரிக்கு என்ன பயன் நமக்குக் கிடைக்கிறது?" என்று எப்பொழுது யோசிக்க ஆரம்பித்தார்களோ, அப்பொழுதிலிருந்து அந்த நாட்டிலிருக்கும் ஆதிக்கக்காரர்களுக்கு ஆபத்து துவங்குகிறதென்று அர்த்தம். மக்களின் ஆராய்ச்சி, கலகத்தில், கிளர்ச்சியில் போராட்டத்தில், புரட்சியில், எந்த அளவில் போய் நின்ருலும், நாட்டில் ஒரு மாறுதல் நிகழப்போகிறது என்பது மட்டும் நிச்சயமாகிவிடுகிறது.

பிரெஞ்சு அரசாங்கம், மக்களின் சக்திக்குத் தகுந்தபடி வரிகளைப் போடவில்லை, அரண்மனையின் தேவைக்கு வேண்டுமளவு வரிகளைப் போட்டார்கள். அரசனுக்கோஅரசிக்கோ, புதிதாக பெரிய கட்டடம் ஒன்றை பார்ப்பவர்கள் கண்டு வியக்கமளவுக்குக் கட்டவேண்டுமென்று எண்ணம் தோன்றிவிட்டால் போதும். உடனே அதற்காகும் இலட்சக்கணக்கான பணத்தை மக்களிடமிருந்து வசூலிக்க வேண்டியிருந்தது. மன்னனுடையபெருமை, மக்களின் ஏழ்மையை அதிகரிக்கச் செய்தது.

பிரெஞ்சுப் புரட்சிக்கு, வரிக் கொடுமையைவிடக் கூட முக்கிய காரணமாயிருந்தது, அவர்கள் போட்ட பற்ருக்குறை வரவு செலவுத் திட்டங்கள் தாம்! அரசனுக்கும் அரசிக்கும் வேண்டும்பொழுதெல்லாம் மந்திரிகள் பணம் தரவேண்டியிருந்தது, எவ்வளவுதான் வரி போட்டு வசூலித்துக் கொடுத்தாலும் அரண்மனைச் செலவு உயர்ந்துகொண்டே போனது, வரவுக்கு மேலாகச் செலவு ஆனதும் கடன்கள் வாங்கப்பட்டன! கடன்கள் வாங்கும் அளவையும் மீறிவிட்டது. அரண்மனைச் செலவோ, அதிகரித்தபடி இருந்தது, அரசியும் அரசனும் அரண்மனை உல்லாசிகளும் பணம் கேட்டபடி இருந்தனர்.

வரவுக்கு மேல் செலவு செய்தாய், துண்டு விழுவதை ஈடுகட்ட நோட்டுகளை அடிக்கலாம் என்று இப்பொழுது சொல்கிருர்களே, புரட்சிக்கு முன்னிருந்த பிரெஞ்சு மந்திரிகள், இந்த நோட்டடிக்கும் முறையைச் செய்து பார்த்தார்கள். வரவுக்குமேல் ஆகும் செலவை புதிய நோட்டுகளை அடித்து ஈடுகட்டப் பார்த்தார்கள். சிறிது காலம் அதனுல் சமாளிக்க முடிந்தது, கடன்பளுவும் செலவும் அதிகமாகிவிட, புது நோட்டு அடிப்பதன்மூலம் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. நோட்டுகளின் மதிப்பு குறைந்தது. கடன்காரர்கள் புது நோட்டுகளை வாங்க மறுத்தனர். கடனை அடைக்க முடியவில்லை, கடன் சுமை வட்டியும் முதலுமாக ஏறியது! வரிக் கொடுமை, ஏழைகளின் வேதனை, மன்னனின் மந்தபுத்தி, அரசியின் ஆடம்பரம், பிரபுக்களின் உல்லாசம், குருமார்களின்போலித்தன்மை, வரவுக்குமேல் அரசாங்கச் செலவு, பற்ருக்குறை நிதித் திட்டம், புதிய காகித நோட்டுகள், வளர்ந்துவரும் கடன் சுமை, எல்லாம் பிரெஞ்சுப் பொருளாதாரத்தைச்சீரழித்தன, அவை கருத்த மேகங்கள் திரண்டு வருவருவதைப்போல, சூழ்ந்து வந்தன. திக்குகள் இருண்டன, மின்னல் மின்னியது, இடி இடித்தது, பிரெஞ்சு நாட்டின் மீது புரட்சி விழுந்தது! 0

சேலம் தேர்தல் வழக்கு நிதி!

சேலம் தொகுதி தேர்தல் வழக்கைச் சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்டு, சீரிய முறையில், உயர்நீதி மன்றங்கள் வரை சென்று வாதாடவேண்டி நண்பர்கள் பலரும் நன்கொடை அளித்துள்ளார்கள். விபரம் வருமாறு:

26-5-57 இல் வடக்கநந்தல் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ரூ. 6-00;

20-6-57 இல் செங்குன்றம் பொதுக் கூட்டத்தில் செங்குன்றம் தி. மு. கழகம் ரூ. 100-00; புழல் ஸ்குரு பாக்டரி தொழிலாளர்கள் ரூ. 16-50:

21-6-57 இல் கோடாலிக் கருப்பூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ரூ. 9-00;

22-6-57 இல் சித்திரகுடி பொதுக்கூட்டத்தில் தஞ்சை மானேஜியப்பா தெரு வளளுவர் மன்றம் ரூ. 7-31;

23-6-57 இல் திண்டுக்கல் சிறப்புக் கூட்டத்தில் ரூ. 162-00

23-6-57 இல் மதுரை நகர் பொதுக் கூட்டத்தில் பல்வேறு அமைப்புக்களும் நண்பர்களும் ரூ. 100-05;

24-6-57 இல் பாண்டியூர் பொதுக்கூட்டத்தில் பல்வேறு அமைப்புக்களும், நண்பர்களும் ரூ. 42-84;

25-6-57 இல் அலவாக்கோட்டை பொதுக்கூட்டத்தில் ரூ. 14-75;

26-6-57 இல் பெரம்பலூர் பொதுக் கூட்டத்தில் தி. மு. கழகம் ரூ. 20-00;

கபிலர்மலை தி. மு. கழக அன்பர்கள் தோழர் ஆர். சிவசன்முகம் மூலம் ரூ. 6-00;

30-6-57 இல் பாலக்காடு பொதுக்கூட்டத்தில் ரூ. 2-09;

2-7-57 இல் ஆலப்பாடி கூட்டத்தில் ரூ. 2-41.

மணியார்டர் மூலமும், அஞ்சல் மூலமும் வரப்பெற்றவை:

திருநெல்வேலி தோழர் ப. இலக்குமணன் அவர்கள் மூலம் ரூ. 65-50; காயல்பட்டினம் தி. மு. கழகம் ரூ. 1-00; குடந்தை என் அப்துல்சலாம் அவர்கள் மூலம் பல அன்பர்கள் ரூ. 11-50; திருவனந்தபுரம் பி. சங்கரன் ரூ. 5-00; தோழர் அறிவுடை நம்பி மூலம் பல்வேறு மணங்களின் சார்பாக ரூ. 9-00; நாகை, வெளிப்பாளையம் தோழர் எல். ஆர். கணபதி ரூ. 10-00; மேடை வலசு சி. சிதம்பரனுர் ரூ. 5-00; சென்னை கே. சுப்பிரமணிய தம்பிரான் தனபால் ரூ. 2-00; மேற்கு வங்காளம் கஞ்சரபாரா என். மாதவன் ரூ. 5-00; மணிமுந்தாறு ஆர். சீனிவாசன் ரூ. 5-00; புலவர் அறிவுடை நம்பி மூலம் ரூ. 7-06; விருதை வா. அ. சங்கர பாண்டியன் ரூ. 5-00; அனந்தாபுரம் தி. மு. கழகம் ரூ. 3-50; ஆயக்குடி எம். எஸ். மணிமகுடம் ரூ. 2-00; அயன்புரம் முத்தமிழ் மன்றம் ரூ. 6-00.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

இரா. நெடுஞ்செழியன்,

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை—1.

திட்டத்தில் மாறுதல்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துறையில் ஏதும் குறைத்தல் செய்யக்கூடாது. ஏனென்ருல், உயர்தரக்கல்வியிலும் தொழில் கல்வியிலும் தேர்ச்சி பெற்றவர்கள். அதிகமாக்கப்படாவிட்டால், ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதே கடினமாகிவிடும்.

திட்டம் 4800 கோடியாக இருந்தபொழுது, கல்விக்காக 307 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது திட்டம் 6000 கோடியாக உயர்ந்து விட்டது, இருந்தாலும் கல்விக்கு ஒதுப்படுவது எவ்வித உயர்வுமின்றி 307 கோடி ரூபாய் அளவில் நிற்கிறது. இதில் ஏதாவது குறைக்கப் பட்டாலும் படலாம். முதலில் மொத்தத் திட்டத்தின் அளவில் 100க்கு 7 விகிதம் கல்விக்காக இருந்தது. இப்பொழுது கல்விக்கான பணம் 100க்கு 5 ஆக மாறியுள்ளது."

சி. டி. தேஷ்முக் இரண்டாவது திட்டத்தை உருவாக்கிய திட்டக் குழுவில் ஒருவராக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. 0

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண்: 55697